# கதையும் கருத்தும்

13/3.63

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 JUL 1962
MADRAS

MADRAS RECORD OFFICE

TB
031,3(5)
N63
84715

# கதையும் கருத்தும்

(ஐந்தாம் வகுப்பு)

MADRAS RECORD OFFICE
MADRAS

ஆசிரியர் :
வித்துவான் மு. பழநிச்சாமி,
தமிழாசிரியர்,
கழக உயர்நிலைப் பள்ளி, அவிநாசி, கோவை.

விலை: 50 புதுக்காசுகள்

தி புக் சென்டர்
ராஜ வீதி :: கோயமுத்தூர் - 1.

முதற் பதிப்பு : 1961
மறு பதிப்பு : 1963.

*Name of the Book :* Kathaiyum Karuthum.
*Name of the Author :* Vidwan M. Palaniswamy.
*Name of the Publishers :* THE BOOK CENTRE,
Raja Street, Coimbatore-1
*Name of the Printers :* Progressive Printers,
Coral Merchant St., Madras-1
*Kind of Paper used :* 10.9 Kg. White Printing.
*Price per copy :* Re. 0—50 nP.

TB
031,3(5)
N63

தமிழ்நாடு பாடப்புத்தகக் குழுவினர்
அங்கீகரித்தது. ஆதாரம்: கெஜட்
பக்கம் 7. தேதி 16—5—62.

84915

சென்னை நகர ஏஜன்டுகள் :
எம். தாமோதரம் & கம்பெனி
அப்பா பில்டிங்ஸ் : : சென்னை-1.

# முன்னுரை

இளஞ் சிறுர்கட்கு நீதியைத் தனியே கற்பித்தல் அரிது; கதையோடு சேர்த்துக் கற்பித்தல் எளிது. இம் முறை புதியது அன்று; தொன்று தொட்டு நம் தமிழகத்தில் இருந்து வரும் பழமையான முறையே ஆகும்.

இச் சிறு நூல் அவ்வழி நின்றே எழுதப்பட்டுள்ளது. இஃது என்னுடைய முதன் முயற்சி ஆகும். இந் நூல் வெளியீட்டாளருக்கு எனது உளங்கனிந்த நன்றி.

தமிழ் மாணவருலகம் இதனைப் படித்துப் பயன் பெற ஆசிரியப் பெருமக்களும், பள்ளியை நடத்துவோரும் உதவிசெய்ய வேண்டுகிறேன்.

—ஆசிரியர்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | மோசி கீரனர் | .... | 1 |
| 2. | கோவூர் கிழார் | .... | 7 |
| 3. | குமணன் | .... | 11 |
| 4. | இளையான்குடி மாற நாயனர் | .... | 16 |
| 5. | மனுநீதிச் சோழன் | .... | 21 |
| 6. | வந்தி | .... | 26 |
| 7. | ஜயசிங்கு | .... | 30 |
| 8. | கிருஷ்ணதேவராயர் | .... | 37 |
| 9. | வெனீஸ் நகர வணிகன் | .... | 44 |
| 10. | நெப்போலியன் | .... | 51 |

# 1. மோசிகீரனார்

தமிழ் வளர்த்த மதுரை மாநகரின் தென் கீழ்த் திசையில் மோசிகுடி என்னும் ஊர் ஒன்று உள்ளது. ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன் இப் பழம் பெரும் பதியில் கீரனார் என்னும் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர், தம் இயற்பெயரோடு ஊர்ப் பெயரும் சேர்த்து மோசிகீரனார் என்று அழைக்கப் பட்டார். அவர் கல்வியிலும் கவிபாடும் ஆற்றலிலும் வல்லவராய் விளங்கினார். அவர் பாடிய பாடல் ஒன்று அவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது. அப் பாடலில், அவர் வேந்தனுக்குரிய கடமையைத் தெளி வாக எடுத்துக் கூறுகிறார்.

“மக்கள் உயிர் வாழ்வதற்கு நெல்லும் நீரும் தேவை. ஆனால், கூர்ந்து நோக்கின் நெல்லும் உயிர் அன்று ; நீரும் உயிர் அன்று. நெல்லும் நீரும் எல்லோருக்கும் வேண்டிய அளவில் கிடைக்கும்படிச் செய்வது மன்னன் கடமையாகும். இல்லையேல் மக்கள் துன்பம் அடைவர். ஆகவே, அவற்றை எல்லா மக்களும் இனிது பெற்று, இன்புடன் வாழுமாறு செய்யும் அரசனே மக்களின் உயிர் ஆவான். எனவே, ‘யானே நாட்டு மக்களின் உயிர்’ என்பதை அறிந்து நடப்

பதே மன்னனது முதற் கடமையாகும்" என்று கீரனர் அப் பாடலில் கூறுகிருர். இத்தகு கருத்து மிக்க பாடல் யாவரும் படித்து மகிழ வேண்டியது ஆகும்.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலே உலகம்
அதனுல், யான்உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானே வேந்தற்குக் கடனே."

இத்தகைய பொருட் செறிவு மிக்க பாடலேப் பாடி தாம் பிறந்த பாண்டி நாட்டிற்குப் பெரும் புகழைத் தேடித் தந்த மோசிகீரனர், சேரநாடு செல்ல ஆசைப் பட்டார். எனவே, வஞ்சி மாநகர் நோக்கி வழி நடந்தார்.

அப்பொழுது சேரநாட்டைப் பெருஞ்சேரல் இரும் பொறை என்பான் ஆட்சி புரிந்து வந்தான். அவன் மாரியெனப் புலவர்க்கு வாரி வழங்கினன். வீரத்தில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றிச் சிறந்து விளங் கினன். பதிற்றுப் பத்தின் எட்டாம் பத்து இவனேப் பற்றியதாகும். அதனேப் பாடியவர் அரிசில் கிழார். அப் பாட்டினேக் கேட்டு உள்ளம் குளிர்ந்த பெருஞ் சேரல் புலவருக்கு ஒன்பது நூருயிரம் பொன் பரிசில் அளித்தான். இச் செயல், இவனது கொடைச் சிறப்பினேயும் தமிழ்ப் பற்றினேயும் விளக்குகிறது அல்லவா ?

கொடை வண்மை மிக்க பெருஞ்சேரல் படை வன் மையிலும் சிறந்து விளங்கினன். இவன் ஒரு சமயம் தகடூரின்மீது படையெடுத்துச் சென்ருன். இவ்வூர் சேலம் மாவட்டத்தில் உள்ளது. தற்காலத்தில் இது தர்மபுரி என்று வழங்கப்படுகிறது. அவ்வமயம் தகடூ

ரில் ஆட்சி புரிந்து வந்தவன், ஔவையாரால் புகழ்ந்து பாடப்பட்ட அதியமான் நெடுமானஞ்சி ஆவான். அதியமானுக்கும் பெருஞ்சேரலுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. இறுதியாகப் பெருஞ்சேரல், வன்மை மிக்க தகடூர்க் கோட்டையைத் தகர்த்து வீழ்த்தி அதியமானை அழித்தான். இச் சிறப்புப் பற்றியே இவன், 'தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை' என அழைக்கப்பட்டான்.

இவ்வாறு கொடையிலும் வீரத்திலும் சிறந்து விளங்கிய இவன் புகழ் தமிழகம் எங்கும் பரவியிருந்தது. பழுமரத்தை நாடி வரும் பறவைபோல் புலவர்கள் இவனை நாடிவந்து, இவன் பெற்ற வெற்றியினைச் சிறப்பித்துப் பாடிப் பரிசில் பெற்று மகிழ்ந்தனர்.

பெருஞ்சேரலின் புகழை அறிந்த மோசிகீரனார், இவனைப் பாடிப் பரிசில் பெற விழைந்தார்; மன்னனைக் காணவேண்டும் என்ற ஆவலால் கல்லும் முள்ளும் நிறைந்த காடுகள் பலவற்றைக் கடந்து வந்து, சேரன் தலைநகரை அடைந்தார். வாயில் திறந்திருந்த காரணத்தால் அரண்மனையினுள் புலவர் தங்குதடையின்றிச் சென்றார். நெடுந்தூரம் வழி நடந்து வந்த களைப்பு புலவரை வாட்டியது. ஆகவே, அவர் சற்று இளைப்பாற விரும்பினார். அங்கு அழகிய கட்டில் ஒன்று இருந்தது. அதன்மீது மென்மையான மெத்தை விரிக்கப்பட்டிருந்தது. அது வெற்றி முரசு வைத்தற்குரிய இடமாகும். நீராட்டுவதற்காக முரசு எடுத்துச் செல்லப்பட்டிருந்ததால் முரசின்றி அக் கட்டில் இருந்தது. புலவர் அதன்மீது ஏறிப்படுத்து நன்கு உறங்கி விட்டார்.

புலவர் படுத்து உறங்கிய சிறிது நேரத்தில் அரசன் அவ்வழியே வந்தான். முரசு கட்டிலில் எவரோ படுத்து உறங்குவதைக் கண்ட மன்னன் உள்ளத்தில் சினம் பொங்கியது. முரசு கட்டிலில் அமரவோ, படுக்கவோ கூடாது. அவ்வாறு செய்வது அரசனை அவமதிப்பதாகவே கருதப்படும். அரசர்கள் பண்டைக் காலத்தில் வீரமுரசினைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டு வந்தார்கள். அரியணைக்கு நிகராகவே முரசு கட்டில் கருதப்பட்டது. அப்படியிருக்க, அக்கட்டிலில் ஒருவன் படுத்து உறங்கியதால் அரசன் உள்ளம் பொருமிக் குமுறியது; கண்களில் தீப்பொறி பறந்தது; உதடு துடித்தது.

உறையிலிருந்த வாளை எடுத்துக்கொண்டு தூங்குபவனை வெட்டுவதற்காக மன்னன் விரைந்தான். அருகில் சென்றதும் மன்னன் ஒரு கணம் யோசித்தான். ஓங்கிய வாளை அவன் உறையினுள் போட்டான். உறங்குபவர், தமிழ் முழுவதும் அறிந்த புலவர் என்பதை மன்னன் அறிந்தான். 'புலவர் மிகவும் களைத்துப் போயிருக்கிறார். நன்றாக உறங்கட்டும்' என்று எண்ணிய மன்னன், அருகில் இருந்த கவரியினை எடுத்துப் புலவர் உடல் குளிர வீசிநின்றான்.

சற்று நேரத்தில் புலவர் கண்விழித்தார். தம் அருகில் மன்னன் கவரிவீசிக்கொண்டு நிற்பதையும், தாம் மஞ்சத்தில் படுத்திருப்பதையும் கண்ட புலவர் திடுக்கிட்டார். அப்பொழுதுதான் தாம் படுத்து உறங்கியது முரசுக்கட்டில் என்பது புலவருக்குத் தெரிந்தது. 'முரசு கட்டிலை அவமதித்தலாகிய பெரும் பிழையைத்

செய்துவிட்டோமே' என்று புலவர் வருந்தினர். பயத்தால் அவர் உடல் நடுங்கியது.

"பெரியீர்! நீவிர் ஏன் நடுங்குதல் வேண்டும். இப்பொழுது என்ன நடந்து விட்டது. நீவிர் எக் குற்றமும் செய்யவில்லையே" என்றான் மன்னன். அரசனுடைய உயர் பண்பைக் கண்ட புலவர் வியப்படைந்தார்.

"வீரமுரசத்திற்குரிய, எண்ணெய் நுரைபோன்ற மெல்லிய பட்டு மெத்தை விரித்த மஞ்சத்தில் ஏறி அமர்ந்து இனிது உறங்கினேன். இக் கொடும்பிழை செய்த எனது உயிரை அன்றே நீ போக்கியிருக்க வேண்டும்! நான் தமிழை உணர்ந்தவன் என்பதற்காகவே அவ்வாறு செய்யாது விடுத்தனை. தமிழ்மீதும், தமிழ்ப் புலவர் மீதும் நீ கொண்டுள்ள அன்பினையும் பற்றினையும் விளக்குவதற்கு இது ஒன்றே போதும். அம்மட்டில் அமையாது, யான் உறங்கி விழிக்கும்வரை கவரி கொண்டன்றே வீசுகின்றனை! உன் பெருமையினை எவ்வாறு புகழ்வேன்" என்று புலவர் அரசனை மனமாரப் பாராட்டி மகிழ்ந்தார்.

புலவர், மன்னன் அவையில் விருந்தினராய்ச் சில நாட்கள் தங்கியிருந்தார். புலவரும் மன்னரும் அளவளாவி மகிழ்ந்தனர். புலவரின் கவிதைச் சுவை கேட்டு மகிழ்ந்த மன்னன், புலவருக்குப் பொன்னும் மணியும் பரிசாகக் கொடுத்தான்.

பிள்ளைகளே, கவனித்தீர்களா! புலவர் கற்ற கல்வி அன்றே அவரைச் சாவினின்றும் காப்பாற்றியது.

கல்வி கற்ற ஒருவன் எங்குச் சென்றாலும் மதிக்கப்படுவான்; எல்லோராலும் போற்றப்படுவான். கல்வி கற்ற ஒருவனுக்கு எந்நாடும் தன்னுடே யாகும்; எவ்வூரும் தன்னூரே ஆகும். ஆகவே, அத்தகைய கல்வியை நீங்கள் முயன்று கற்றல் வேண்டும்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு." — குறள்.

# 2. கோவூர் கிழார்

சோழநாடு வளமிக்க நாடு. வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி அந் நாட்டினை வளப்படுத்துகின்றது. செந்நெல்லும் கரும்பும் அங்கு செழித்து நிற்கும். காவிரியின் இரு மருங்கிலும் தென்னையும் கமுகும் ஓங்கி நிற்கும். 'சோழவளநாடு சோறுடைத்து' என்று புலவர்கள் போற்றினர்.

இத்தகைய வளமிக்க நாட்டைப் பண்டைக் காலத்தில் சோழர்கள் ஆண்டு வந்தனர். நாட்டினை மேலும் மேலும் வளப்படுத்திய காரணத்தால் சோழர்கள் வளவர் எனப் பெயர் பெற்றனர். அத்தகைய வள்வர் குடியில் தோன்றிய நலங்கிள்ளி என்பான், புகார் நகரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தான். நலங்கிள்ளி படை பலம் மிக்கவன். நலங்கிள்ளி நாடு ஆண்ட காலத்தில், சோழர் குடியில் பிறந்த நெடுங்கிள்ளி என்பான் ஆவூரை ஆட்சி புரிந்து வந்தான்.

நலங்கிள்ளி ஆவூர்க் கோட்டையையும் தனதாக்கிக் கொள்ளவேண்டும் என்று விரும்பினான். எனவே, அவன் பெரும்படையைத் திரட்டிக்கொண்டு சென்று ஆவூரை முற்றுகையிட்டான். திடீர்த்தாக்குதலை எதிர்பாராத நெடுங்கிள்ளி அஞ்சி விட்டான். அவன் கோட்டைக்கதவுகளை அடைத்து விட்டு கோட்டைக்குள்ளே வாளாவிருந்தான். நலங்கிள்ளியோ கோட்டையை முற்றுகை யிட்டுக் கொண்டிருந்தான்.

மாற்ருெருவன் போருக்கு அழைக்கும்போது அஞ்சாமல் வந்து போரிடுவதுதான் வீரனுக்கு அழகு. ஆனல், நெடுங்கிள்ளியோ அவ்வாறு செய்யவில்லை. அவனே, அஞ்சி ஒரு மூலையில் ஒடுங்கிக் கிடந்தான்.

இம் முற்றுகையால் துன்பம் உற்றவர் ஆவூர் மக்களே யாவர். யானைகள் குளத்தில் படிந்து நீராடவில்லை. அவைகளுக்குக் கவளமும் கிடைக்கவில்லை. அவைகள் கட்டுத்தறியிலேயே கட்டுண்டு கிடந்தன. துன்புற்ற யானைகள் தம் கரங்களை நிலத்தில் அறைந்து இடிபோல் முழக்கின. ஆடலும் பாடலும் நிறைந்திருந்த வீடுகளில் அழுகுரல் கேட்டது. சின்னஞ்சிறு குழந்தைகள் பாலின்றி அழுதன. மனையறம் காக்கும் மங்கையர் முகத்தில் பொலிவும் மகிழ்ச்சியும் இல்லை. அவர்தம் கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அவர்கள் மலரின்றிக் கூந்தல் முடித்தனர்.

இவற்றையெல்லாம் கண்ட கோவூர் கிழார் உள்ளம் வருந்தினர். மக்கள் கவலையுருதபடி அவர்களைப் பாதுகாக்க வேண்டியது மன்னனது பொறுப்பு ஆகும். ஆனல், நெடுங்கிள்ளியோ, மக்கள் கவலையுறுவதை எண்ணிப் பாராமல் கோட்டைக்குள் சுகமாக இருந்தான். புலவர், நெடுங்கிள்ளிக்கு அறிவுரை கூறி மக்கள் துயரை நீக்க விரும்பினர். புலவருக்கு நலங்கிள்ளியின் செயல் குற்றமற்றதாகவே தோன்றியது. ஆவூர் அவனுக்கும் உரிமை யுடையதே. அவ்வுரிமையைப் பெற அவன் நாற்பெரும் படையுடன் போரிட வந்துள்ளான். இது வீரனுக்குரிய செயலே. நெடுங்கிள்ளியும் அவ்வாறே கோட்டைக்கு வெளியில் வந்து

போரிட்டு இருக்கவேண்டும். அவனே, அதற்கு மாருகக் கோட்டைக்குள் ஒளிந்துகொண்டு இருந்தான்.

புலவர் நேராக நெடுங்கிள்ளியிடம் சென்றுர் ; அஞ்சாமல் தம் உள்ளத்தில் நேர்மை என்று பட்டதை எடுத்துரைத்தார். ஊர் மக்கள் உற்ற துன்பம் முழுவதையும் எடுத்துக் கூறினர். அம்மட்டில், புலவர் உள்ளம் சாந்தி அடையவில்லை. “ மன்ன, வீரம் உடையவன் ஆயின் வெளியில் வந்து பகைவனேடு போரிடு. வீரம் இல்லையாயின் இன்னெரு வழியும் உளது. அது அறத்தின்பாற்பட்டது. நலங்கிள்ளியும் சோழர் குடியில் பிறந்தவனே. அவனுக்கும் ஆவூரை ஆளும் உரிமை உள்ளது. நலங்கிள்ளிக்கு நாட்டைக் கொடுத்துவிட்டு, நீ அறவழியில் நில். இவ்வாறு, மறமும் அறமும் இல்லாது மதிலின் ஒரு புறத்தே ஒடுங்கிக் கிடப்பது முடியுடைய வேந்தனுக்கு அவமானம் ! அவமானம் !!” என்று புலவர் நெடுங்கிள்ளியை இடித்து உரைத்தார். இதைவிட உணர்ச்சிமிக்க இடித்துரை வேறு இல்லை என்றே கூறலாம். புலவரின் அறிவுரை கேட்டு நெடுங்கிள்ளி மனம் மாறினன். ஆவூர்க்கோட்டையை நலங்கிள்ளிக்கே அளித்து விட்டான்.

ஆவூர்க் கோட்டையை நலங்கிள்ளிக்கு அளித்த நெடுங்கிள்ளி, உறையூர்க் கோட்டையைக் கைப்பற்றினன். நலங்கிள்ளி அங்கும் சென்று முற்றுகையிட்டான். முன்போலவே, நெடுங்கிள்ளி கோட்டை வாயிலை அடைத்துக் கொண்டு உள்ளே இருந்தான். கோவூர்கிழார் அங்கும் சென்றுர். நெடுங்கிள்ளி முன்னரே ஒருமுறை தம்சொற் கேட்டு ஆவூர்க்

கோட்டையை நலங்கிள்ளிக்குக் கொடுத்தான். இம் முறையும் அவனையே இடித்துரைத்தல் சீரியது அன்று என்று புலவர் எண்ணினார். களம் வகுத்துக் கையில் வாளுடன் நின்ற நலங்கிள்ளியிடம் புலவர் நேரே சென்றார்.

"வீரம் மிக்க சோழர் குடிப்பிறந்த தோன்றலே, நீ போரிடப் போவது சேரனோடும் அன்று; பாண்டியனோடும் அன்று. உன் பகைவன் பனந்தோடு அணிந்தோனும் அல்லன்; வேப்பந்தார் அணிந்தோனும் அல்லன். நீ சூடிய ஆத்திப் பூ மாலையினையே உன் பகைவனும் சூடியுள்ளான். நீ பிறந்ததும் புலவர் போற்றும் சோழர் குடியே. அவன் பிறந்ததும் அக் குடியே. உங்களில் எவர் தோற்றாலும் தோல்வி சோழர் குடிக்கே. நீங்கள் செய்யவிருக்கும் போர் உங்கள் குடிப்பெருமைக்கு ஏற்றது அன்று. நீங்கள் மேற்கொள்ளும் செயல் பாண்டியருக்கும் சேரருக்கும் நகைப்பை உண்டாக்கும்" என்று புலவர் இதமாகக் கூறினார். புலவர் பொன்னுரை கேட்ட நலங்கிள்ளி உள்ளம் திருந்தினான்; போரினை நிறுத்தினான்.

இருபெரும் போரினைப் புலவர் தடுத்து நிறுத்தினார். அதற்கு, அவருக்குத் துணையாக இருந்தது அவரது நாவன்மையே ஆகும். புலவர் நாவன்மைக்கு முன்னால், முடி வேந்தரும் பணிந்து அவர் வழி நின்றனர். சொல் லாற்றல் உடையோர் இம் மாநிலத்தில் எக் காரியத் தினையும் எளிதில் நிறைவேற்ற முடியும். அதனாலன்றோ வள்ளுவப் பெருமான்,

" நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று" —என்றார்.

# 3. குமணன்

சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளல் பலருள் குமணனும் ஒருவன் ஆவான். முதிரமலை இவனுக்குச் சொந்தமாய் இருந்தது. இம்மலை பழநி மலைத்தொடர்களுள் ஒன்றாகும். இயற்கை வளம் மிக்கது முதிரமலை. அங்கே மூங்கில்கள் வானுற ஓங்கி நிற்கும். மலைச் சரிவுகளில் பலா காய்த்துக் கனிந்து தொங்கும். வானரங்கள் கனி கொடுத்து மந்திகளொடு கொஞ்சி விளையாடும். அருவிகள் திரை எழுப்பி இசைபாடி ஓடும். அவ்விசை யமுதம் கேட்டு யானைகள் துயிலும். இத் தகைய சிறப்பு வாய்ந்தது முதிரமலை. இம் மலையினைச் சுற்றியுள்ள நிலப்பகுதியைக் குமணன் ஆண்டு வந்தான்.

அவன், இல்லையென்று வந்தவர்கட்கு இல்லை யென்று கூறாமல் வாரி வழங்கி வந்தான். பெருஞ் சித்திரனார் என்னும் புலவர் இவ்வள்ளலிடம் சென்று, "மன்னா, வறுமையால் நான் துயர் உறுகிறேன். அவ் வறுமைத் துன்பத்தை நீக்க உன்னிடம் ஓடி வந்தேன். உன்னிடம் பரிசில் பெறும் தகுதி எனக்கு உண்டோ, இல்லையோ? யான் அறியேன். நீயும் அதை எண்ணிப் பார்க்க வேண்டா. உன் பெருமைக்கு ஏற்ற பெரும் பொருளை நீ வழங்குதல் வேண்டும். அக்கொடைப் பொருள் கண்டு பெரும் வேந்தர்களும் நாணுதல் வேண்டும்" என்று கூறினார். மன்னன் மகிழ்ந்து,

“ புலவர் பெருமானே, உங்களுக்கு இல்லாத பொருளா, யாது வேண்டும் ? கேளுங்கள் தருகிறேன் ” என்றான்.

“ தலைவ, உன்னிடம் நான் வேண்டுவது ஒரு பெரிய யானை. அத்துடன் பெரும் பொருளும் அளிக்க வேண்டும். அந்த யானையின்மீது ஏறி அமர்ந்து கண்டோர் வியக்க நான் செம்மாந்து செல்லுதல் வேண்டும் ” என்றார் புலவர். குமணன் அவ்வண்ணமே கொடுத்தான். இவ்வாறு, கேட்டவர்க்கு இல்லை யென்னாது வாரி வழங்கிய அவ்வள்ளல் புகழ் பரவாத இடம் இல்லை. அவன் புகழ் பாடாத புலவரும் இலர்.

உலகோர் போற்ற வாழ்ந்த இவ் வள்ளலுக்குப் பகையும் இல்லாமல் இல்லை. குமணனுக்குத் தம்பி ஒருவன் இருந்தான். அவன் இளங்குமணன் என்று அழைக்கப்பட்டான். குமணன் எவ்வளவுக்கெவ்வளவு உயர்ந்த குணங்கள் பெற்றிருந்தானோ, அவ்வளவுக் கவ்வளவு இளங்குமணன் இழிந்த குணங்களைப் பெற்றிருந்தான். உடன் பிறந்த அண்ணனைக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்று திட்ட மிட்டான். அவனுக்குத் துணைபுரியவும் சிலர் தயாராய் இருந்தனர். இச் செய்தியைக் குமணன் அறிந்தான். குமணன் தம்பியைக் கண்டிக்கவோ, வெறுக்கவோ இல்லை. விருப்பம்போல் தம்பியே நாடு ஆளட்டும் என்று எண்ணினான். தம்பியின் எண்ணத் திற்கு இடையூறாகக் குமணன் அங்கு இருக்க விரும்ப வில்லை. யாரிடமும் சொல்லாமல் நாட்டை விட்டு நீங்கிக் காட்டிற்குச் சென்றான். அங்கு எவருக்கும் தெரியாமல் வாழ்ந்து வந்தான்.

குமணன் மறைந்திருந்து, பின்னர்த் தனது ஆட்சிக்குத் தீங்கு விளைத்தலும் கூடும் என்று இளங் குமணன் பயந்தான். அதற்காக, அண்ணனைக் கொன்று விடவேண்டும் என்று எண்ணினான். "என் சகோதரனான குமணனைக் கொன்று அவனது தலையைக் கொண்டு வந்து தருபவர்கட்கு ஆயிரம் பொன் பரிசு தருவேன்" என்று இளங் குமணன் நாட்டில் பறை சாற்றினான். இவன் பறை சாற்றி என்ன பயன்? எவரும் குமணன் தலையைக்கொண்டு வரவில்லை. அவ் வள்ளலைக் கொல்ல யாருக்குத்தான் மனம் வரும்.

இந்நிலையில், பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் குமணனைக் கண்டு பரிசில் பெறுவதற்காக முதிர மலைக்கு வந்தார். நாட்டில் நடந்த செய்தியைப் பிறர் சொல்லக் கேட்ட புலவர் திடுக்கிட்டார். எவ்வாறேனும் அவ் வள்ளலைக் காணவேண்டும் என்று அவர் விரும்பினார். காட்டிற்குச் சென்றார்; குமணனைக் கண்டார். "வறியவர் துன்பத்தினை நீக்கும் தலைவ நான் வறுமையால் வாடுகின்றேன். என் வீட்டிலுள்ள அடுப்பு நெருப்பினைக் கண்டு பல நாட்கள் ஆயின. அடுப்பில் காளான்கள் பூத்து நிற்கின்றன. குழந்தைகள் பசியால் வாடி மெலிந்து அழுகின்றன. அதனைக் கண்ட தாய் வருந்துகிறாள். உன்னுடைய நிலை அறிந்தும் உன்னிடம் பொருள் பெற வந்துள்ளேன். எனக்கு நீ உதவி செய்தல் வேண்டும்" என்று புலவர் தம் வறுமை நிலையை எடுத்துரைத்தார்.

குமணன் கண்களில் நீர் கசிந்தது. புலவரின் வறுமை நிலை அவன் உள்ளத்தை உருக்கியது. நாடு

இழந்தது பற்றியுங்கூட மன்னன் வருந்தவில்லை. புலவர்க்கு உதவி செய்ய முடியவில்லையே என்று வருந்தினன். செய்வது அறியாது திகைத்த மன்னன் சிறிது நேரம் யோசித்தான். பின்னர், புலவரை அருகில் அழைத்து, "புலவர் பெரும, என் தம்பி என் தலையைக் கொண்டு வருபவர்கட்கு ஆயிரம் பொன் பரிசில் தருவதாகக் கூறியுள்ளான். என் தலையைக்கொண்டு சென்றால் நீங்கள் அப் பரிசிலைப் பெற முடியும். உங்கள் வறுமையும் தீரும். உங்களுக்கு உதவி செய்த பேறும் எனக்குக் கிடைக்கும். இதோ வாள்! என் தலையைக் கொய்து சென்று பெரும் பொருள் பெற்று வாழுங்கள்" என்று குமணன் வாளை நீட்டினன்.

> "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு"

"அன்பு இல்லாதவர்கள் எல்லாப் பொருளையும் தாமே வைத்து வாழ்ந்து கழிவர். அன்புடையார் பிறர்க்குப் பொருளைக் கொடுப்பது மட்டும் அல்லாமல், தம் என்பினையும் கொடுக்கத் தயங்கமாட்டார்" என்று வள்ளுவப் பெருமான் கூறுகிறார். குமண வள்ளலோ தன் உயிரையே கொடுக்கத் துணிந்தான். என்னே அவனது அன்பு உள்ளம்!

வள்ளலிடமிருந்து வாளினைப் பெற்றுக் கொண்ட புலவர் அவனை எவ்வாறேனும் வாழவைக்க வேண்டும் என்று எண்ணினர். அவ் வாளினை எடுத்துக்கொண்டு இளங்குமணன் இருந்த அவைநோக்கி விரைந்தார். அவ் விளவலைக் கண்டு தமக்கு வாள் கிடைத்த விதத்தை எடுத்துக் கூறினர். "இளவலே, நான்

உன் அண்ணனைக் கண்டு பொருள் கேட்டேன். அவனே தன் தலையை எனக்குத் தருவதற்காக வாளை எடுத்து நீட்டினன். இத்தகு பெருங்குணம் படைத்த வள்ளலை, நீ காட்டிற்கு அனுப்புதல் நீதியோ? அறம் வழுவாத உயர் குடியில் பிறந்த மன்ன, நீ அறத்தை மறந்தனையோ? பழிச் செயல் ஒன்றுதானும் புரியாத பெருங்குடியில் பிறந்த நீ, பழிச் செயல் புரியத் துணிந்தனையோ?" என்று புலவர் கூறிய அறிவுரைகளைக் கேட்ட இளங் குமணன் மனம் மாறினன். காட்டிற்குச் சென்று தன் அண்ணனிடம் மன்னிப்புக் கேட்டான். குமணனை அழைத்து வந்து நாட்டிற்கு அரசன் ஆக்கினன்.

---

# 4. இளையான்குடி மாற நாயனார்

அறுபத்து மூன்று நாயன்மார்கள் வரலாறு படிப்ப தற்குச் சுவை பயக்கக் கூடியதாகும். அவர்கள் செயற்கரிய செயல்களைச் செய்துள்ளனர். பெரிய புராணம் அவர்கள் வரலாற்றினையும் பெருமையினை யும் விரிவாக எடுத்துரைக்கின்றது. அறுபத்து மூவ ருள் ஒருவரான இளையான்குடி மாற நாயனார் வரலாற்றை இங்குக் காண்போம்.

இளையான்குடி என்னும் ஊரிலே வேளாளர் மர பிலே அவதரித்த மாறனார் என்பவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இயற்பெயரோடு ஊர்ப்பெயரும் சேர்த்து அவர் இளையான்குடி மாற நாயனார் என அழைக்கப் பட்டார். அவர் பெற்ற செல்வம் அனைத்தினையும் அறச்செயலிலேயே செலவிட்டு வந்தார்; சிவபெரு மானிடத்திலும் சிவனடியாரிடத்திலும் அளவிறந்த அன்பு கொண்டிருந்தார். அவர் வீட்டிற்கு வரும் அடி யவர்களை முகமலர்ந்து இன்சொல் கூறி வரவேற்பார்; அவர்களை ஆசனத்தில் அமரச்செய்து அன்புடன் வழிபடுவார்; பாங்குடன் சமைத்த அறுசுவை உண்டி வழங்கி அவர்கள் உள்ளத்தைக் குளிரச் செய்வார்; உடுக்கப் புத்தாடையும் வழங்குவார். புண்ணியம் வளர்ந்தது போலவே, அவருடைய செல்வமும் மலை போல் ஓங்கி வளர்ந்தது.

செல்வம் குறைந்தாலும், அவர் சிந்தை குறை யாதவர் என்பதை ஊரும், உலகும் அறியவேண்டும்

என்பதைத் தில்லை அம்பலத்தே நடம்புரியும் சிவ பெருமான் எண்ணினர். அதன்படியே பெருமான் அருளாலே அவரிடத்திலிருந்த செல்வம் மெல்லக் குறைந்தது; வறுமை வந்தது. ஆனாலும், அவர் கை சுருங்கவில்லை! மனம் சுருங்காத மாறனார், வீட்டிலே இருந்த பொன்னையும் மணியையும் விற்றார். அதனால் பெற்ற பொருள்கள் அனைத்தையும் அறத்திற்கே செல விட்டார். முன்னோர் தேடி வைத்திருந்த பொருள்கள் அனைத்தும் குறைந்தன. பின்னர் கடன் வாங்கி அறம் செய்தார். நாளடைவில் கடன் கொடுப்பாரும் குறைந்தனர். வறுமை அவரை வாட்டியது. செல்வ மும் இன்பமும் நிறைந்து நின்ற வீட்டில் வறுமையும் துன்பமும் வந்து நின்றன. அக்காரணம்பற்றி அவரே உண்ண உணவின்றி வருந்தினர்.

ஒரு நாள் இரவு நேரம்; பேய்மழை கொட்டியது. அந்நேரத்தில் ஓர் அடியவர் வந்து கதவைத் தட்டினர். மாறனார் கதவைத் திறந்தார். அடியார் ஒருவர் பசி யால் வருந்தி, உடுத்த ஆடையெல்லாம் நனைந்து, உடல்மெலிந்து துன்புற்றுத் தம்மெதிரே நிற்பதை மாறனார் கண்டார்; உள்ளம் நைந்தார்; விரைவில் அவரை வீட்டினுள் அழைத்துச் சென்றார். அவருக்கு உடுத்த வேறு ஆடை தந்தார். இது மட்டும் அடி யாருக்குப் போதுமா? அவர் உடலம் பசியால் வாடிக் கிடக்கின்றதே! அப் பசிப் பிணியைப் போக்க வேண்டுமே! அன்றிரவு அவரே உண்ண உண வின்றிப் பட்டினியாகக் கிடந்தார். அந்நிலையில் அவர் அடியவருக்கு உணவு அளித்தல் எவ்வாறு இயலும்? அவர் எப்படியேனும் அடியவருக்கு அமுது செய்விக்க

வேண்டும் என்று எண்ணினர்; நேராகத் தம் மனைவியிடம் சென்றார். மனைவியார் கணவர் குறிப்பறிந்து நடக்கும் பண்பினர்; கற்பு நெறி வழுவாதவர். "சிவநேயச் செல்வர் வந்துள்ளார். நமக்கு உணவு இல்லையேனும், நாம் அவருக்கு அமுது படைக்க வேண்டும். அதற்கு என்ன வழி உள்ளது" என்று அவர் தம் மனைவியாரைக் கேட்டார்.

"இனி, நமக்குக் கடன் தருவார் யாரும் இல்லை. பொழுதும் போய்விட்டது. வேறு வழியும் தெரியவில்லை. தீவினையேன் யாது செய்வேன் காலையில் வயலில் கொண்டுபோய் இறைத்த முளை நெல்லைவாரிக் கொண்டு வந்தால், உணவு செய்து அடியவருக்கு அமுது படைக்கலாம்" என்று அம்மங்கையார் பதில் கூறினர்.

அது கேட்ட மாறனர் மனம் மகிழ்ந்தார். பெருஞ் செல்வம் பெற்றவர்போல் துள்ளிக் குதித்தார்; கூத்தாடினர். பெருமழை பெய்து எங்கும் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. உலகம் முழுவதையும் காரிருள் சூழ்ந்து நின்றது. வழியோ தெரியவில்லை. யாவரும் செல்ல அஞ்சும் அந்த நடுயாமத்திலே அவர் கூடை ஒன்றினைத் தலையிலே கவிழ்த்துக்கொண்டு, முன் சென்ற பழக்கத்தால் வழியறிந்து வயலை அடைந்தார். மழைப் பெருக்கால், வயலில் இறைத்திருந்த நெல் முளைகள் எல்லாம் நீர்வழியே மிதந்து சென்றன. மாறனர் அவைகளை எல்லாம் அரித்து அரித்துக் கூடையில் இட்டார். பின்னர், கூடையினைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு வீட்டிற்கு வேகமாக ஓடி வந்தார்; மனைவியிடத்தே கொடுத்தார்.

மனைவியார் நெல்லினை விருப்புடன் வாங்கிச் சென்றார். நீரில் இட்டுச் சேற்றினைச் கழுவினார். நீரில் நனைந்த நெல்லை வறுத்துக் குத்தி அல்லவா அரிசி ஆக்கவேண்டும்! "அடுப்பு மூட்ட விறகு இல்லையே" என்று கணவரிடம் உரைத்து அம்மையார் வருந்தினார். கணவர் அழகிய வீட்டின் ஒரு பகுதியைப் பிரித்தார்; அங்கு இருந்த கழிகளையும், வெட்டுக் கைகளையும் அறுத்து வீழ்த்தினார்; விறகாக்கினார். அம்மையாரும் அந் நெல்லினை வறுத்து அரிசியாக்கி அமுது செய்தார். "இனி கறிக்கு என்ன செய்வது?" என்று அம்மையார் கணவரிடம் உரைத்தார். மாறனார் கொல்லையில் முளைவிட்டிருந்த முற்றாத கீரையைப் பறித்துக் கொண்டுவந்து கொடுத்தார். அவ் வம்மை யார் தம் கைத்திறமையால், அக் கீரையைக் கொண்டு பலவிதமான கறிவகைகளைச் சுவையுடன் சமைத்து முடித்தார்.

மாறனார் அடியவரிடம் சென்று, "அடியேன் பிழைக்க இங்கு எழுந்தருளிய சிவநேயப் பெரியீர்! அமுது செய்ய எழுந்தருள்க" என்று கூறி அடியவரை எழுப்பினார். என்னே வியப்பு! அடியவர் அங்கே இல்லை. திருமாலும் பிரமனும் தவஞ்செய்தும் தேடியும் காணமுடியாத சிவபெருமான், உமாதேவியோடு இடபவாகனத்தில் மாறனாருக்குக் காட்சியளித்தார். இளையான்குடி மாற நாயனார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சிவபெருமானை மனமாறப் போற்றி வணங்கினார்.

"அன்பனே, எனது அன்பர்கட்குப் பேரமுது அளித்த நீ, உன் மனைவியோடும் என்னுலகத்தை

அடைந்து இன்புற்று வாழ்வாயாக" என்று அருளிச் சிவபெருமான் மறைந்தார்.

> "செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
> நல்விருந்து வானத் தவர்க்கு"

என்னும் மறைமொழிப்படி நாயனுர் விண்ணுலகு அடைந்து தேவர்கட்கு நல்விருந்தினர் ஆயினுர்.

# 5. மனுநீதிச் சோழன்

காவிரி பாயும் சோழ நாட்டில், புகழும் பெருமை யும் மிக்க பழம்பதிகள் பல உள. அவற்றுள் திருவாரூரும் ஒன்று. அவ்வூரில் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்து காணப்பட்டன. அவ் வூரிலே வேதியர் ஓதும் வேத ஒலி ஒரு பக்கம் கேட்கும்; சிவநேயச் செல்வர்தம் பாட்டொலி ஒரு பக்கம் கேட்கும்; ஆடும் மங்கையர்தம் சதங்கை ஒலி ஒரு பக்கம் கேட்கும்; மதம் கொண்ட யானை பிளிறும் பேரொலி ஒரு பக்கம் கேட்கும்; குதிரையின் கனைப் பொலி ஒரு பக்கம் கேட்கும்; இத்தனைக்கும் மேலாக மன்னர் அரண்மனையிலே வெற்றிச் சங்கு முழங்கும்.

அத்தகைய வளமும் பெருமையும் கொண்ட பதியைப் பண்டொரு காலத்தில் மனுநீதிச் சோழன் ஆண்டு வந்தான். அவன் வீரம் மிக்கவன். அவன் பெயர் கேட்டாலே பகைவர் அஞ்சி நடுங்குவர். அவன் குடிமக்களைத் தன்னுயிரென மதித்துப் பேணி வந்தான். நீதி நூல் சொல்லியபடி முறை தவறாது ஆட்சி புரிந் தான். அவன் ஆட்சியில் மக்கள் கவலையின்றி வாழ்ந்து வரலாயினர்.

மனுநீதிச் சோழனுக்கு ஒரு மைந்தன் இருந்தான். அவன் தந்தைக்குரிய அருங்குணங்கள் எல்லாம் அமையப் பெற்றிருந்தான். அவன் தக்க ஆசிரியரை அடைந்து கற்பன கற்றுக் கல்வியில் மேம்பட்டு விளங்கினான்; நூல் கல்வி மட்டுமின்றி அரசர்க்கு

வேண்டிய யானையேற்றம், குதிரையேற்றம், வில் வித்தை போன்ற கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். அவன் நாளொரு மேனியாக வளர்ந்து இளவரசன் என்னும் தன்மையை அடைந்தான்.

அரசிளங்குமரன் ஒரு நாள் மாலை உலாச்செல்லப் புறப்பட்டான். முரசும் சங்கும் முழங்க வீரர் புடைசூழ அரசிளங்குமரன் தேர்மீது உலா வந்தான். நகர் வளம் கண்டு மகிழ்ந்து வந்த அரசிளங்குமரன் நடுங்கும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அவ்வமயம் வீதியில் ஒரு பசுவினுடைய இளங்கன்று துள்ளி ஓடி வந்தது. வந்த அக் கன்று கண்ணிமைப்பொழுதில் தேர்ச் சக்கரத்தில் வீழ்ந்து அடிபட்டு உயிர் நீத்தது.

கன்றினை இழந்த தாய்ப்பசு வருந்தியது; நெருப்பெனப் பெருமூச்சு விட்டது; கண்களில் நீர் சிந்தியது. அப் பசு மன்னன் அரண்மனை வாயிலை அடைந்து அங்குக் கட்டித்தொங்கிய ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பால் அடித்தது. அவ்வோசை கேட்ட வேந்தன் அரியணையிலிருந்து கீழே இறங்கி கடை வாயிலுக்கு ஓடி வந்தான். வாயிலில் நின்ற காவலர் அரசனை வணங்கி, "இறைவ, இங்கு ஒரு பசு வந்து மணியைத் தன் கொம்பால் அடித்தது" என்று கூறி நின்றனர். அதனைக் கேட்டு மன்னன் வருந்தினன். பக்கத்தில் கண்ணீர் சோர நின்ற பசுவைக் கண்ட மன்னன் கண்களில் நீர் கசிந்தது. அரசன் அமைச்சரை நோக்கினன். அமைச்சர் மன்னரை வணங்கி நடந்ததை நடந்தபடி உரைத்தார்.

அதுகேட்ட அரசன், "அந்தோ! எனக்கு வந்துற்ற தீமைதான் என்னே! என் செங்கோல் முறை

வெகு நன்ருக உள்ளது! பச்சிளங்கன்றினை இழந்து பரிதவிக்கும் பசுவினுக்கு என்ன பதில் உரைப்பேன்!" என்று பற்பல கூறி வருந்தினுன். மன்னன் துயரினை உணர்ந்த அமைச்சர்கள், "மன்னர் பெருமானே, வருத்தம் கொள்ளுதல் வேண்டா. மறையுணர்ந்த அந்தணர்களை அணுகி, அப் பாவத்தினை நீக்குதற்கு அவர்கள் கூறும் வழியில் நடத்தலே அறமாகும்" என்றனர். அதுகேட்ட அரசன், "நீங்கள் கூறுகின்ற அறம் இளங்கன்றை இழந்து வருந்தும் பசுவின் நோய்க்கு மருந்து ஆகுமோ? பகைவரால், என் உறவினர்தம்மால், கள்வரால், விலங்கினங்களால் மன்னுயிர்க்குத் துன்பம் வராமல் காக்க வேண்டியது என் பொறுப்பு ஆகும் அன்ருே? என் மகன்செய்த குற்றத்தைப் போக்கத் தவமும் வேள்வியும் செய்து விட்டு, நாளை அன்னியன் ஓர் உயிரைக் கொன்ருல், அவனுக்கு மரணதண்டனை விதித்தால் உலகம் என்னை ஏசாதோ? மனுநீதி மனுச்சோழனுல் மாண்டது என்று உலகம்தான் பழிக்காதோ?" என்று அமைச்சர்கட்குக் கூறினுன்.

"தலைவ, குற்றம் மைந்தனுடையது அன்று. 'இளங்கன்று பயமறியாது' என்ற பழமொழிக்கு இணங்க, அது அறியாமல் ஓடி வந்து தேர்ச்சக்கரத்தில் விழுந்து உயிர் விடுத்தது. அதற்காக மைந்தனைக் கொல்வது முறையன்று; மரபும் அன்று. மறைநூல் வழிநின்று அறம் புரிதல் தொன்று தொட்டு வரும் முறையாகும்" என்று அமைச்சர் கூறினர். அதற்கு அரசன், "நீவிர் உரைப்பது அறம் அன்று. பசுவின் துன்பத்தை நீக்க இயலாத யானும், அவ்வண்ணமே என் மைந்தனை இழந்து துன்புறுதல் வேண்டும்.

அதுவே, நீதியும் அறமும் ஆகும்" என்று கூறினன். அமைச்சர்கள் அஞ்சினர்; நடுங்கினர்; அவ்விடத்தை விட்டு நீங்கினர்.

அரசன் ஓர் அமைச்சனை அழைத்து, "என் மைந்தனைப் பசுவின் கன்று இறந்த இடத்தில் கிடத்தி, அவன்மீது தேரினை ஊர்ந்து அழித்து வருக" என்று கட்டளை இட்டான். அமைச்சன் கண்ணீர் விட்டுக் கதறினன். அரசன் கட்டளையை மறுப்பதும் நல்லமைச்சர் கடன் ஆகாது. அரசிளங்குமரனை மாய்க்கவும் அவன் அன்பு நெஞ்சம் இடந் தரவில்லை. கடைசியாக, அவ்வமைச்சன் தன்னுயிரையே மாய்த்துக் கொண்டான்.

இதனை அறிந்த அரசன் தானே தேரினை ஓட்டிச் சென்று, மைந்தனைக் கீழே கிடத்தித் தேரினை ஊர்ந்தான். ஒரு மகன்தான் தன் குலத்துக்கு உள்ளான் என்பதனையும் அரசன் எண்ணவில்லை. தருமத்தின் வழிச்செல்வதே தன் கடன் என்று எண்ணி, மகன் மார்பகத்தின்மீது தேரினை ஓட்டிய மன்னவனின் கடமை உணர்ச்சிதான் என்னே! செங்கோல் முறைதான் என்னே! என்னே!! 'நீதி முறை தவருது ஆட்சி நடத்தி உயிர்களைப் பாதுகாக்கும் மன்னவன், மக்களுக்குக் கடவுள் போன்றவன் ஆவான்' என்று குறள் கூறுகிறது.

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
> இறையென்று வைக்கப் படும்"

என்ற வள்ளுவப் பெருமானின் வாய்மொழிப்படி நடந்த மன்னன் செயல் கண்டு மக்கள் கண்ணீர்

சொரிந்தனர். தேவர் பூமாரி பொழிந்தனர். அக் கணமே சிவபெருமான் உமாதேவியுடன் இடப வாகனத்தில் மன்னனுக்குக் காட்சி அளித்தார். உயிர் மாண்ட பசுவின் இளங்கன்றும் அரசிளங்குமரனும் அமைச்சனும் சிவனருளால் உயிர்பெற்று எழுந்தனர். மன்னன் மனம் மகிழ்ந்தான்.

---

# 6. வந்தி

பாண்டிமா நாட்டின் தலைநகரம் மதுரையம்பதி யாகும். பண்டைப் புலவர்கள் இருந்து தமிழினை ஆராய்ந்ததுவும், முச்சங்கங்கள் இருந்ததுவும், சோம சுந்தரக் கடவுள் அறுபத்திநான்கு திருவிளையாடல்கள் புரிந்ததுவும் மதுரைமா நகரமே ஆகும். இவ்வூரின் கண் வைகையாறு ஓடுகிறது.

முன்னொரு காலத்தில், அவ்வூரில் வந்தி என்னும் கிழவி ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவளுக்குத் துணை புரிவார் யாரும் இல்லை. அவள் பிட்டுச் சுட்டு விற்றுத் தன்வாழ்நாளைக் கழித்து வந்தாள். ஒரு நாள் வையை ஆற்றில் நீர் பெருக்கெடுத்து ஓடியது. கரை உடைந்து வெள்ளம் ஊருக்குள் புகுந்தது. எனவே அரசன் வீட்டுக்கு ஒருவராகச் சென்று கரையை அடைக்க வேண்டும் என்று மக்களுக்கு ஆணையிட் டான். வந்தி செய்வதறியாது திகைத்தாள். 'இறைவா, கூலியாள் யாரும் கிடைக்கவில்லையே. என் பங்கு அடைபடாமல் கிடப்பதை மன்னன் அறிந்தால் சீற்றம் கொள்வான். அநாதையாகிய ஏழையேன் யாது செய்வேன்' என்று அவள் இறைவனை வேண்டிக் கொண்டாள்.

வந்தி, மதுரைச் சோமசுந்தரப் பெருமானிடம் அளவிறந்த அன்பு உள்ளவள். அவள் நா எப்பொழு தும் அவன் நாமத்தையே உச்சரித்துக் கொண்டு இருக்கும். அன்பர்கட்கு அருள்புரியும் சிவபெருமான்,

அவள் துன்பத்தை நீக்கத் திருவுளம் கொண்டார். அழுக்கு நிறைந்த பழந்துணி ஒன்றை இடையிலே உடுத்தியும், தோளின்மீது மண்வெட்டியினை ஏந்தியும், தலைமேல் கூடையினைக் கவிழ்த்தும் கூலியாள் போல் வேடம் பூண்ட சிவபெருமான், ' கூலி கொடுத்து என்னை வேலைக்கு ஏற்றுக்கொள்வார் உண்டோ?" என்று ஓலமிட்டுக் கொண்டு வீதிவழியே வந்தார்.

அக்குரலினைக் கேட்ட வந்தி, வறுமை உற்றார் பெருஞ்செல்வம் பெற்றதுபோல் அகமிக மகிழ்ந்தாள். அந்தக் கூலியாளை அழைத்து, "நீ, எனக்கு அளந்து கொடுக்கப்பட்டுள்ள கரையினை அடைத்துத் தருவாயோ?" என்று கேட்டாள். அதற்கு அக் கூலியாள், "நான் அடைத்துத் தருவேன். அதற்கு, நீ தரும் கூலி என்ன?" என்றுகேட்டான். "பிட்டில் உதிர்ந்த பொடிகளை நான் உனக்குக் கூலியாகத் தருவேன்" என்று வந்தி கூறினாள். அதற்குக் கூலியாள் சம்மதித்தான்.

பின்னர், வந்தி அழுக்கு நிறைந்த துணியில் மூடி வைத்திருந்த பிட்டின் பொடியினை அவனுக்கு நல்கினாள். "மிக நன்று, மிக நன்று!" என்று கூறிக் கொண்டே சிவபெருமான் அப் பிட்டின் பொடியினை ஆவலுடன் உண்டார்; வயிறார உண்ட பின்னர் வேலைக்காட்டிற்குச் சென்றார்.

அவர் அங்குச் சென்று மண்ணை வெட்டுவார். வெட்டிய மண்ணைக் கூடையிலிட்டு முடிமேல் வைப்பார்; பாரம் அதிகம் என்று கீழே பாதியைக் கொட்டுவார்; பிறகு சும்மாட்டினைக் கீழே தட்டுவார்;

கூடையை இறக்கிக் கீழே வைப்பார் ; சும்மாட்டினைத் தலைபடியக் கட்டுவார். இவ்வாறு வேலை செய்யாமல் பொழுது போக்கிவிட்டு, உச்சிவேளை ஆனதும் அவர் சாப்பாட்டிற்கு வந்து விடுவார். இவ்வாறு, அவர் காலத்தை வீணே கழித்துக் கொண்டிருந்தார்.

ஆட்களிடம் வேலை வாங்கும் மேற்பார்வையாளர் கள் அடைத்த கரையினைப் பார்த்துக் கொண்டு வந் தனர். வந்தி பங்கு மட்டும் அடைபடாது இருப் பதனைக் கண்டனர். அவர்கள், மன்மதன்போல் நின்ற அக் கூலியாளை நோக்கி, "ஏடா, எல்லாருடைய பங்குகளும் அடைபட்டன. நீ மட்டும் உன் பங்கை அடைக்காமல் இருப்பது ஏன்?" என்று கேட்டனர். அக் கூலியாள், அதற்கு ஒன்றும் பதில் உரையாது பெருமிதத்தோடு நின்றான்.

மேற்பார்வையாளர்கள் அரசனிடம் சென்று, "மன்னர் பெருமானே, எல்லாரும் தத்தம் பங்கை அடைத்தனர். வந்தியின் பங்கு மட்டும் இன்னும் அடைக்கப்படவில்லை. வந்தியின் கூலியாளாக வந்த வன் கரையினை அடைக்காது வீணே காலத்தைப் போக்குகிறான். அவன் வேலையைப் பற்றி மனத்தி லும் நினைப்பது இல்லை" என்று கூறினர். அது கேட்ட அரசன், அடைத்த கரையினைப் பார்ப்பதற் காக அமைச்சர்களோடு அங்குச் சென்றான். அவர் கள் கூறியதுபோலவே, எல்லாரும் தத்தம் பங்கைச் சரிவர அடைத்திருந்தனர். வந்தியின் பங்கு மட்டும் அடைக்கப்படாது கிடந்தது. அது கண்ட அரசன் சீற்றம் உற்றான் ; வந்தியின் ஆளைப்பிடித்து வரும்படி ஏவலர்கட்குக் கட்டளை யிட்டான்.

அவர்கள், அக் கூலியாளை இழுத்துக் கொண்டு வந்து அரசன் முன் நிறுத்தினர்.

அரசனின் கோபம் அவனைக் கண்டதும் எல்லை மீறியது. தன் கையிலிருந்த பிரம்பால் அக் கூலியா ளின் முதுகில் ஓங்கி அடித்தான். அடி விழுந்தது தான் தாமதம்! கூலியாள் வேடத்திலே வந்திருந்த சிவபெருமான் மண்ணை உடைப்பிலே கொட்டி மறைந்தார். அவர் முதுகிலே பட்ட அடி பாண்டியன் முதுகிலே பட்டது. அவனுடைய மனைவியர்தம் மேனி மேற் பட்டது; அமைச்சர்மீது பட்டது; அரசிளங் குமரர்கள்மீது பட்டது; திருமால், பிரமன் முதலான தேவர்கள்மீது பட்டது; எல்லா யானை குதிரைமேற் பட்டது; எல்லா உயிர்களின்மீதும் பட்டது. கரை யும் அடைபட்டது.

தேவர்க்கெல்லாம் தேவனான சிவபெருமான் கூலியாளாக வந்தார்; மண்வெட்டினார்; அரசனிடம் அடியுண்டார். இவையெல்லாம் எதற்காக? வந்தி தன் மீது வைத்திருந்த அன்பின் பொருட்டே ஆகும். அன்புடையவர்கட்கு ஆண்டவனும் பணிபுரியக் காத் துக் கிடக்கின்றான். கடவுளின் பாதங்களை இடைவிடா மல் நினைப்பவர்கட்கு எப்பொழுதும் துன்பம் இல்லை. அம்மட்டோ! அக்கணமே தேவர்கள் வந்து வந்தியை அழகிய விமானத்தில் வைத்துத் தேவலோகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

> “வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
> யாண்டும் இடும்பை இல.” —குறள்.

# 7. ஜயசிங்கு

நமது தமிழகத்தில் சரித்திரப் புகழ்பெற்ற ஊர்கள் எத்தனையோ உள்ளன. அவைகளுள் செஞ்சி என்பதும் ஒன்று. இது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது. இது மலைவளமும் நிலவளமும் உடையது. பாலாறு, சேயாறு, பெண்ணை, சங்கராபரணி முதலிய நதிகள் இதனை வளப்படுத்துகின்றன. இப்பகுதியினிடையில் கோலகிரி, கிருஷ்ணகிரி, இராசகிரி, இரத்தினகிரி என்னும் நான்கு மலைகள் அமைந்திருக்கின்றன. இத்தகைய வளம் பல நிறைந்த இப்பெரும் பதியை ஒருகாலத்தில் சுரப் சிங்கு என்னும் தரணி சிங்கு சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தான்.

அவன் காலத்தில், ஔரங்கசீபின் புதல்வனான ஷா ஆலம் என்பவன் டில்லியில் சக்கரவர்த்தியாய் அரசு புரிந்து வந்தான். அவன் தன் ஆட்சியின் கீழிருந்த எல்லா அரசர்கட்கும் ஓலை அனுப்பி வரவழைத்தான். அவர்களுக்கு ஒரு மாபெரும் விருந்தும் நடத்தினான். விருந்து உண்டு எல்லா அரசர்களும் மகிழ்ந்தனர். பின்னர், ஷா ஆலம் எல்லா அரசர்களையும் விளித்து, "அரசர்களே, எம்மிடத்தில் பஞ்ச கல்யாணி என்னும் ஒரு சிறந்த குதிரை உள்ளது. அதன் மீது ஏறிச் சவாரி செய்து அதனை அடக்குபவர் பதினாறு பாரம் பொன் பரிசு பெறுவர். பந்தயத்தில்

தோல்வி உறுபவர் பதினறு ஆண்டு சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும்" எனச் சொன்னன்.

மன்னர் மனம் கலங்கினர். குதிரையை அடக்க எவரும் துணிந்து முன்வரவில்லை. "நாடாளும் வேந்தர்களே, வீரம் செத்துவிட்டதா? இந்தக் குதிரை மீது ஏறிச் சவாரி செய்யும் ஆற்றல் உங்களுள் எவருக்குமே இல்லையா?" என்று அரசர்களை நோக்கி ஷா ஆலம் கேட்டான். "இதோ நான் இருக்கிறேன்" என்று தரணிசிங்கு எழுந்து நின்றான்.

பேரிடியெனக் கனைத்துப் பெருமிதத்துடன் நின்ற குதிரையின் மீது தாவி ஏறினன் மன்னன். அந்தோ பரிதாபம்! அக் குதிரை அவனைக் கீழே தள்ளிவிட்டுக் காற்றினும் வேகமாய்ப் பறந்தோடி விட்டது. நிபந்தனைப்படி தரணிசிங்கு பதினறு ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியதாயிற்று.

மன்னன் தரணிசிங்கு டில்லிக்குச் சென்றிருந்த பொழுது, அவன் மனைவி இரமாபாய் கருவுற்றிருந்தாள். மன்னன் சிறைப்பட்ட செய்தி அறிந்து அவள் உள்ளம் வருந்தினள். சில நாட்களில் ஓர் ஆண் குழந்தை அவளுக்குப் பிறந்தது. சேயின் முகம் கண்டு தாய் தன் துயரை ஒருவாறு மறந்தாள். குழந்தைக்கு ஜயசிங்கு என்று பெயரிட்டனர். அவன் வளர்மதி யென நன்கு வளர்ந்து வந்தான். அவன் கல்வி பல கற்று மேம்பட்டு விளங்கினன்; அரசர்க்குரிய யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை முதலிய கலை

களில் தேர்ச்சி பெற்று விளங்கினன். சிறையில் இருந்த தரணிசிங்கு இச் செய்தி கேட்டு மகிழ்ந்தான்.

ஜயசிங்குவின் இன்னுயிர்த் தோழனய் விளங்கிய வன் மகமதுகான் என்பவன் ஆவான். இருவரும் ஒரு பொழுதும் இணைபிரிய மாட்டார்கள். இருவரும் வீரத்தில் சிறந்து விளங்கினர்கள். ஒருநாள் இருவரும் காட்டிற்குச் சென்று வேட்டையாடிவிட்டு வீட்டுக்குத் திரும்பினர். ஜயசிங்கு தன் தாயைக் காண அந்தப் புரம் சென்ருன். அப்பொழுது அவள் சோகமே உரு வெடுத்திருந்தாள்; கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடியது. அதைக் கண்ட ஜயசிங்கு மனம் வருந்தினன். "அம்மா, நீங்கள் வருந்தும்படியாக நடந்த நிகழ்ச்சி யாது?" என்று பணிவுடன் அவன் தன் தாயைக் கேட்டான்.

அவள் தரணிசிங்கு டில்லி சென்று சிறைப்பட்ட வரலாற்றைக் கூறினள். அதைக் கேட்ட அவன், "அம்மா, விடை தாருங்கள். நான் இப்பொழுதே சென்று அக் குதிரையை அடக்கித் தந்தையை மீட்டு வருகிறேன்" என்ருன். அவ்வாறு கூறும்போதே அவன் தோள்கள் வீரத்தால் விம்மிப் பருத்தன. தாய் எவ்வளவோ இதமாகக் கூறி அவனைத் தடுக்க முயன்ருள். அவன் கேட்கவில்லை. கடைசியாகத் தாய் வாழ்த்துக் கூறி விடைகொடுத்து அனுப்பினள்.

ஜயசிங்கும், அவன் உயிர்த்தோழன் மகமது கானும் குதிரையேறி டில்லிக்குச் சென்றனர். இவர் களின் வீரப்பொலிவைக் கண்ட அந்நகர மக்கள் வியப்புற்றனர்; வைத்த கண் வாங்காமல் பார்த்தனர்.

ஜயசிங்கு சபாமண்டபம் சென்று, மன்னனை வணங்கித் தான் வந்த வரலாற்றை உரைத்தான். ஷா ஆலம், அரசிளங்குமரனை நோக்கி, "பிள்ளாய், நீயோ சிறுவன்; அவசரப்படாதே. எதையும் ஆய்ந்துசெய்ய வேண்டும். இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டுத் துன்பம் அடையாதே. உன் தந்தையை வேண்டுமானால் விடுதலை செய்கிறேன். அழைத்துக்கொண்டு செல்" என்று கூறினான். "மன்னர் மன்னா! அரசர் குலத்திற்கே அது அவமானம். சுத்த வீரனுக்கும் அழகன்று. நான் குதிரையை அடக்கி என் தந்தையை மீட்டுச் செல்லவே வந்துள்ளேன்" என்றான் ஜயசிங்கு. பின்னர், ஷா ஆலம் மனம் தெளிந்து ஒருவாறு இசைந்தான்.

சிறிது நேரத்தில் குதிரை அலங்கரித்துக் கொண்டு வரப்பட்டது. ஜயசிங்கு சிங்கமென அக் குதிரையின்மீது தாவி ஏறினான். குதிரை காற்றினும் வேகமாகப் பறந்தது. மக்கள் கண்ணிமைக்காது பார்த்தனர். "இந்நேரம் அச் சிறுவனைக் கீழே தள்ளிவிட்டு அக் குதிரை ஓடியிருக்கும். இவன் அக் குதிரையை அடக்குவது என்பது இயலக்கூடியதன்று" என்று சிலர் பேசினர். "அவ் வீரனா கீழே விழுவான்? அவன் அக் குதிரையை அடக்கி வெற்றி கொள்வது உறுதி" என்றனர் ஒருசிலர். சிறிது நேரத்திற்குள் ஜயசிங்கு குதிரையை அடக்கிக்கொண்டு வந்து மன்னன்முன் நிறுத்தினான். டில்லி மன்னவன் மகிழ்ந்து சிறுவனை எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டான். உடனே மன்னன் தரணி சிங்கை விடுதலை செய்தான். தரணி சிங்கு மைந்தனை வாரி எடுத்துத் தோளோடு அணைத்துக் கொண்டான்.

ஷா ஆலத்தின் சேனைத் தலைவனான பீம்சிங்கு, தன் மகள் பதுமினியை ஜயசிங்குக்கு மணம் முடிக்க விரும்பினான். அரசனும் அதற்கு உடன்பட்டான். பின்னர் செஞ்சியில் உள்ளவர்கட்குச் செய்தி அறிவிக்கப்பட்டது. செஞ்சியிலிருந்து இரமாபாய், அமைச்சர் முதலானோர் இளவரசனின் திருமணக் கோலம் காண ஆவலுடன் வந்தனர். டில்லி மாநகரம் தேவலோகம்போல் அலங்கரிக்கப்பட்டது. திருமண விழாவினைக் காணப் பல நாட்டிலிருந்தும் மன்னர்கள் வந்து நிரம்பினர். சான்றோர் வகுத்த நன்னாளில் ஜயசிங்குக்கும் பதுமினிக்கும் திருமணம் வெகு சிறப்புடன் நடந்தது. ஷா ஆலம் ஜயசிங்குக்கு வயிரவாளும், பஞ்சகல்யாணிக் குதிரையும், பொன்னும் மணியும் பரிசாகக் கொடுத்தான். சில நாட்கள் அங்குத் தங்கிய பின்னர், யாவரும் டில்லி மன்னரிடம் பிரியாவிடை பெற்றுச் செஞ்சி மாநகர் வந்து சேர்ந்தனர்.

நாட்கள் சில கழிந்த பின்னர், தரணிசிங்கு நோய் வாய்ப்பட்டு இறந்தான். அவன் மனைவி இரமாபாயும் கணவனுடன் உடன்கட்டை ஏறினாள். அதன் பிறகு, ஜயசிங்கு ஆட்சிப் பொறுப்பினை ஏற்று நாட்டைச் சீரும் சிறப்புடனும் ஆண்டு வந்தான். ஜயசிங்கு, தன் ஆருயிர்நண்பர் மகமதுகானைச் சேனைத் தலைவனாக நியமித்தான். ஜயசிங்குவின் ஆட்சியில் மக்கள் நலமுடன் வாழ்ந்தனர். மழை தவறாமல் பெய்தது. மக்கள் அவனை வாயாரப் போற்றினர். புலவர் அவனை மனமார வாழ்த்தினர். மலைமீது வைத்த விளக்கினைப்போல் அவன் புகழ் எங்கும் பரவியது.

ஜயசிங்குவின் சிறப்பினைக் கண்ட ஆர்க்காட்டு நவாபு பொருமை கொண்டான். பாளையப்பட்டு மன்னர்களைத் துணை சேர்த்துக்கொண்டு செஞ்சியின் மீது படை யெடுத்தான். ஜயசிங்கு அவன் படைப் பெருக்கம் கண்டு அஞ்சவில்லை; போருக்கு வேண்டிய ஆயத்தம் செய்தான். அவ்வமயம் சேனைத் தலைவன் மகமதுகான் ஊரில் இல்லை. அன்றிரவு மகமதுகானின் திருமணநாள். அதற்காக அவன் செஞ்சியிலிருந்து இருபது கல் தூரத்திலிருந்த வழுதாவூருக்குச் சென் றிருந்தான். ஜயசிங்கு நிலைமையை விளக்கி ஒரு கடிதம் எழுதிக் குதிரை ஆட்கள் மூலம் கொடுத்து அனுப்பினுன்.

“ உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு ”

என்னும் வள்ளுவப் பெருமானின் வாய்மொழிப்படி நிற்கும் மகமதுகான் செய்தியறிந்ததும் மணவினையை நிறுத்தி விட்டுச் செஞ்சிக்குப் புறப்பட ஆயத்த மானுன். “ திருமணத்தை முடித்து விட்டுக் காலையில் செல்லலாம் ” என்று அங்கு இருந்த அனைவரும் தடுத் தனர். அவ் வார்த்தைகளை அவன் கேட்கவில்லை. கடமையே பெரிதென ஓடி வந்தான். ஆபத்து நேரத்தில் தன் நண்பனுக்கு உதவி செய்வதே தன் கடனெனத் துணிந்தான். இவன் அன்றோ உண்மை நண்பன்!

ஜயசிங்குக்கும் நவாபுக்கும் கடும்போர் நடந்தது. மகமதுகான் தோள் வலியாலும் வாள் வலியாலும் மாண்ட வீரர் அநேகர். மகமதுகான் மான் கூட்டத்தி னிடையே புகுந்த சிங்கம்போல எதிரியின் சேனையைச்

சின்ஞ பின்னமாக்கினுன். வெற்றியோடு மகமது கான் திரும்பிவருகையில், நவாபுவின் சேனைத் தலைவனுன தாவுதுகான் மறைவாயிருந்து மகமது கானைச் சுட்டுக் கொன்றுவிட்டான். இதைக் கேள்வி யுற்ற ஜயசிங்கு பொங்கி எழுந்தான். பகைவன் சேனைக் கடலுள் புகுந்து பலரை வெட்டி வீழ்த்திஞன். அம்மட்டிலும் அவன் சினம் தணியவில்லை; நவாபை யும் தேடிக் கொல்ல முயன்ருன். நவாபு தன்னைப் போல உருவத் தோற்றமுள்ள ஒரு வீரனைத் தயார் செய்து போருக்கு அனுப்பிவிட்டு, ஓடி ஒளிந்துகொண்டான். ஜயசிங்கு அப் போலி வீரனின் கரத்தைத் துணித்து வீழ்த்திஞன். அவன் உண்மையைக் கூறி மன்னிப்புக் கேட்டான். ஜயசிங்கு அவனை மன்னித் தான். இதுதானே உண்மை வீரனின் பண்பாகும்!

உண்மை நண்பனுன மகமதுகானின் சாவு ஜயசிங்கின் உள்ளத்தைப் பெரிதும் வருத்தியது. நண்பன் இல்லாத வாழ்வு அவனுக்கு வறட்சியாய் இருந்தது. "என் உயிரனைய தோழனை விண்ணுலகிற்கு அனுப்பி விட்டு, நான் மட்டும் செஞ்சி நகருக்குத் திரும்பிச் செல்லமாட்டேன்; நானும் சாகிறேன்" என்று கூறி ஜயசிங்கு தன் உயிரைத் தானே மாய்த்துக் கொண்டான்.

---

# 8. இருஷ்ண தேவராயர்

சற்றேறக் குறைய அறுநூறு ஆண்டுகட்குமுன், துங்கபத்திரை நதிக்கரையில் விஜயநகர இராச்சியம் என்று ஓர் இராச்சியம் இருந்தது. அதனைத் தோற்று வித்தவர்கள் அரிகரர், புக்கர் என்பவர்கள் ஆவார்கள். அந்த இராச்சியத்தின் தலைநகரம் விஜய நகரமாகும். அங் நகரம் இருந்த இடம் இப்பொழுது அம்பி என அழைக்கப்படுகிறது. விஜய நகர இராச்சியம் நாளுக்கு நாள் வளர்ந்து பெரிய இராச்சியமாக மாறியது. விஜய நகரத்தை ஆண்ட அரசர்கள் அஞ்சா நெஞ்சமும் போர்த்திறமும் உடையவர்கள். அவர்கள் அண்டை இராச்சியங்களை யெல்லாம் வென்று தங்கள் இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டனர். விஜய நகரத்தை ஆண்ட அரசர்களுள் பேரும் புகழும் பெற்றுத் திறமையுடன் விளங்கியவர் கிருஷ்ண தேவ ராயர் என்பவர் ஆவார். இவர் கல்வியில் மேம்பட்டு விளங்கினர். தெலுங்கிலும், வடமொழியிலும் நல்ல புலமை பெற்றிருந்தார். கல்வியில் ஆர்வமும் புலமையும் பெற்ற ஒருவர், புலவர்களைப்போற்றி ஆதரிப்பது இயல்புதானே! அவரது அவையில் கல்வியில் சிறந்த எட்டு புலவர்கள் இருந்தனர். அவர் கள் 'அஷ்டதிக் கஜங்கள்' என அழைக்கப்பட்டனர்.

இராயர் அவையில் கல்வி கேள்விகளில் மேம்பட்ட பல அமைச்சர்கள் இருந்தனர். அவர்களுள் அப்பாஜி மிகவும் அறிவுக் கூர்மை வாய்ந்தவர். இவருடைய

இயற் பெயர் திம்மரசு என்பது. இராயரைச் சிறுவயது முதற்கொண்டே திம்மரசு அன்புடன் பேணி வளர்த்து வந்தார். அதன் காரணமாகவே, இராயர் இவரை அப்பாஜி என்று அன்புடன் அழைத்து வரலானுர். நாளடைவில் இவர் இயற்பெயர் மறைந்து அப்பாஜி என்ற பெயரே வழங்கி வரலாயிற்று. இராயருக்கும், நாட்டுக்கும் அப்பாஜி புரிந்த நன்மை அளவிடற்கரியது. அவர் ஒரு சமயம் இராயரைப் பாமினி சுல்தான் சிறையிலிருந்து காப்பாற்றினுர். அவ்வரலாற்றை இங்குக் காண்போம்.

முஸ்லீம் மன்னனுன பாமினி சுல்தானுக்கும் இராயருக்கும் மனப்பகை இருந்து வந்தது. இராயரின் படைபலத்தைக் கண்ட சுல்தான், இவருடன் போர் தொடுக்க அஞ்சினுன். வஞ்சகமாக இவரைக் கைப் பற்றிச் சிறைப்படுத்தவேண்டும் என்று திட்டமிட்டிருந் தான். பலநாள் யோசனைக்குப் பின்பு சுல்தான் ஒரு முடிவுக்கு வந்தான். இராயருக்கு நல்ல குதிரைகளேக் கண்டால் விருப்பம் அதிகம் என்பது சுல்தானுக்குத் தெரியும். சுல்தான் வீரமும் திறமையும் மிக்க படை வீரர்கள் சிலரைக் குதிரை வியாபாரிகள்போல மாறு வேடம் பூணச் செய்தான்; நல்ல அழகும், விலே உயர்வும் கொண்ட குதிரைகள் சிலவற்றை அவர் களிடம் ஒப்புவித்தான். விஜய நகருக்குச்சென்று, இராயரிடம் குதிரை வியாபாரிகள்போல் நடித்து, அவரைக் கைப்பற்றி வரும்படி அவ்வீரர்கட்குக் கட்டளே யிட்டான்.

அவ்வண்ணமே வீரர்களும் விஜயநகருக்குச் சென்றனர்; ஊரின் அருகில் கூடாரம் அமைத்துத்

தங்கினர். வீரர்களில் சிலர் விலையுயர்ந்த குதிரைகளின் மீது ஏறிக்கொண்டு ஊரினுள் புகுந்து முக்கிய தெருக்களில் வலம் வந்தனர். தாங்கள் குதிரை வியாபாரிகள் என்றும், தேவையானவர்கள் குதிரைகளை வாங்கிக் கொள்ளலாம் என்றும் அவ் வீரர்கள் கூறினர். குதிரைகளின் அழகினைப் பார்த்த மக்கள், "இக் குதிரைகளை வாங்கும் ஆற்றல், இந்நகரில் மன்னர்க்கே யன்றி வேறு எவருக்கும் இல்லை" என்று கூறி விட்டுச் சென்றனர். இராயருக்கும் செய்தி எட்டியது. அவர் குதிரை வியாபாரிகளை அழைத்து வரச் செய்தார்.

சுல்தானின் படை வீரர்கள் தங்கள் காரியத்தை முடித்துகொள்வதற்கு, இதுவே பொன்னுன தருணம் என்று எண்ணினர்; தங்கள் குதிரைகளை ஓட்டிக் கொண்டு அரசரிடம் சென்றனர். இராயர் ஒவ்வொரு குதிரையாகப் பார்வையிட்டுக்கொண்டு வந்தார். அக் குதிரைகள் இராயரிடமிருந்த குதிரைகளைவிட அழகுள்ளனவாய்த் திகழ்ந்தன. அக் குதிரைகளை வாங்க வேண்டும் என்ற ஆர்வம் இராயர் உள்ளத்தில் எழுந்தது.

இச் சமயத்தில், "மன்னர் பெருமானே, எங்களிடம் இவைகளைவிட இன்னும் நல்ல குதிரைகள் இருக்கின்றன. அவைகளை நகருக்கு அருகிலுள்ள கூடாரத்தில் கட்டி வைத்திருக்கின்ரேம். நீங்கள் விரும்பினுல் அவைகளையும் வந்து பார்வையிடலாம். தாங்கள் அங்குச் செல்வதற்கு இக் குதிரைகளில் ஒன்றினையே சவாரிக்குத் தேர்ந்து எடுக்கலாம். அப்பொழுதுதான் அதன் திறமை தெரியவரும்" என்று மாறுவேடத்திலிருந்த வீரர்கள் கூறினர்.

வரவிருக்கும் துன்பத்தினை உணராத இராயர் அவர்களோடு செல்ல உடன்பட்டார். அருகில் நின்ற குதிரை யொன்றின்மீது ஏறிக்கொண்டு அவர்களுடன் புறப்பட்டார். துணைக்கு எவரையும் அழைத்துக் கொள்ளாமலேயே அவர்களுடன் இராயர் சென்று விட்டார். மிக விரைவில் மற்ற குதிரைகள் இருந்த இடத்தை எல்லோரும் அடைந்தனர். இராயர் குதிரையிலிருந்து கீழே இறங்கினார். வீரர்கள் உறையினின்றும் உருவிய வாளுடன் அவரைச் சூழ்ந்து நின்றனர். இராயர் திகைத்து விட்டார்.

"மன்னரே, நாங்கள் பாமினி சுல்தானின் படை வீரர்கள். எங்கள் மன்னரின் கட்டளைப்படியே இந்த ஏற்பாட்டினைச் செய்தோம். உங்களைக் கைதாக்கிக் கொண்டுவரும்படி மன்னர் எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார். எங்கள் மன்னரிடம் இவற்றைவிட அழகான குதிரைகள் உள்ளன. அங்கு வந்து நீங்கள் அவைகளையும் பார்வையிடலாம்" என்று பாமினி சுல்தானின் படைத்தலைவன் கூறினான். இராயர் செய்வதறியாது திகைத்தார். அப்பொழுது அவர் கையில் ஆயுதமோ, துணைக்கு ஆளோ இல்லை. வேறு வழியின்றி அவர்களுடன் குதிரையிலேறிச் சென்று சுல்தானின் அரண்மனையை அடைந்தார்.

சுல்தான் இராயரைச் சிறையில் அடைத்தான். தான் எண்ணியது எண்ணியபடியே முடிந்ததை அறிந்த சுல்தான் உள்ளம் பூரித்தான். விஜயநகர இராச்சியத்தின் மன்னனைச் சிறைப்படுத்தி விட்டோம் என்று உள்ளம் பூரித்தான்.

குதிரையில் சவாரி சென்ற இராயர் நெடுநேரம் ஆகியும் திரும்பாதது கண்டு, அப்பாஜியின் உள்ளத்தில் ஐயம் தோன்றியது. இராயர்,குதிரை வியாபாரிகள்போல் மாறுவேட மணிந்த பாமினி சுல்தானின் வீரர்களால் கடத்திச்செல்லப்பட்டு, பாமினி இராச்சியம் சேர்ந்திருக்கிருர் என்பதை ஒற்றர்கள் மூலம் அப்பாஜி அறிந்தார். அவர் உள்ளம் மிக வருந்திஞர். "முள்ளை முள்ளால் எடுப்பதுபோல் சூழ்ச்சியைச் சூழ்ச்சியால் வெல்வேன். தீய எண்ணம் கொண்ட சுல்தானை ஏமாற்றி இராயரை மீட்டு வருவேன்" என்று சூளுரைத்தார் அப்பாஜி.

அப்பாஜியும் வேறு சிலரும் இரத்தின வியாபாரிகள்போல் வேடமணிந்து கொண்டனர். வைரம், வைடூரியம், கோமேதகம், முத்து முதலான விலையுயர்ந்த மணிகளைப் பெட்டி நிறைய அடுக்கிக்கொண்டு கடல் வழியாக ஒரு கப்பலில் பிரயாணம் செய்து பாமினியின் தலைநகருக்கு அருகிலுள்ள ஒரு துறைமுகத்தில் கப்பலை நிறுத்திவிட்டு, அப்பாஜியும் சிலரும் நகருக்குள் சென்றனர்.

மக்கள் கூடும் முக்கியமான இடங்களில் அப்பாஜி விலையுயர்ந்த மணிகளை எடுத்துப் பரப்பினுர்; ஒவ்வொன்ருகக் கையில் எடுத்து விலை கூறினுர். விலையினைக் கேட்ட மக்கள், "இத்தனை விலைகொடுத்து இம்மணிகளை வாங்கும் திறமை இவ்வூரில் எங்கள் அரசருக்கு மட்டுமே உண்டு. நீங்கள் அவரிடம் கொண்டு போய்க் காட்டுங்கள்" என்று கூறிச் சென்றனர்.

சுல்தானுக்கும் செய்தி எட்டியது; அவ் வியாபாரியை அழைத்து வரும்படி ஆட்களை அனுப்பினுன்.

அப்பாஜி பொறுக்கி எடுத்த சில நன்மணிகளுடன் மன்னன் அரண்மனையை அடைந்தார். விலையுயர்ந்த மணிகளைக் கண்ட சுல்தான் உள்ளம் மகிழ்ந்தான். ஒவ்வொன்ருக எடுத்துப் பார்த்தான். "மன்னர் பெருமானே, எங்கள் தலைவனிடம் இதனிலும் விலை யுயர்ந்த மணிகள் உள்ளன. மன்னர் பெருமானுக்கு எம் தலைவரேதான் விலை கூறுதல் வேண்டும். அவர் கப்பலை விட்டுக் கீழே இறங்கி வரமாட்டார். தாங்கள் தயை கூர்ந்து அங்கு வந்தால் அம் மணிகளைக் காணலாம்" என்ருர் அப்பாஜி.

அப்பாஜியின் வார்த்தைகளை உண்மை என்று நம்பினன் சுல்தான். உயர்ந்த மணிகளை வாங்கும் போது நன்கு கவனித்து வாங்குதல் வேண்டும். நல்ல மணிகளை ஆய்ந்து எடுக்கும் வல்லமை சுல்தானுக்கு இல்லை. இராயர் அத் துறையில் வல்லவர் என்று சுல்தான் கேள்விப்பட்டிருந்தான். எனவே இராயரை அழைத்துக்கொண்டு அப்பாஜியுடன் துறைமுகத் திற்குச் சென்ருன். இவர்கள் சென்று கப்பலினுள் ஏறி அமர்ந்தனர். அவர்கள் அமர்ந்ததும் கப்பல் துறையை விட்டு நகர்ந்தது. அப்பாஜியின் தந்திரத் தைக் கண்ட இராயர் மகிழ்ந்தார். தனிமையில் அகப்பட்டுக் கொண்ட சுல்தான் இன்னது செய்வ தென்று அறியாது திகைத்தான்.

'நாம் பிறருக்கு முற்பகல் கேடு செய்யின், பிற் பகல் அக்கேடு நமக்கே வந்து சேரும்' என்று தமிழ் மறை கூறுகிறது.

"பிறர்க்கின்ன முற்பகல் செய்யின் தமக்கின்ன
பிற்பகல் தாமே வரும்."

—குறள்

சுல்தான் இராயருக்குத் தீங்கு செய்தான். அத் தீங்கு சுல்தானுக்கு வருவதற்கு அதிக நாட்கள் ஆகவில்லை. அவன் எவ்வாறு இராயரை ஏமாற்றினனோ அவ்வாறே அவனும் ஏமாற்றப்பட்டான்.

சுல்தான் இராயரைச் சிறையிலடைத்ததுபோல் இராயர் சுல்தானைச் சிறையில் அடைக்கவில்லை. அவரது பரந்த மனம் அதற்கு இடம் தரவில்லை. இராயர் சுல்தானை விருந்தினராகப் பாவித்து அரசாங்க மரியாதையுடன் நடத்தினர். சில நாட்கள் சென்ற பின், சுல்தான் இராயரிடம் விடைபெற்றுக் கொண்டு தன் நாடு சென்றான்.

---

# 9. வெனீஸ் நகர வணிகன்

ஐரோப்பியக் கண்டத்தில் பல நாடுகள் உள்ளன. அவற்றுள் இதாலி என்பதும் ஒன்று. அந் நாட்டில் வாணிகப் புகழ்பெற்ற நகரம் ஒன்று இருந்தது. அதன் பெயர் வெனீஸ் என்பதாகும். அந் நகரில் ஷைலக் என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். ஷைலக் என்பான் பணத்தை வட்டிக்குக் கொடுத்து வாழ்நாளைக் கழிப்பவன். அவன் கடும் வட்டி வாங்குவதில் கெட்டிக் காரன்; சிறிதேனும் நெஞ்சில் ஈவு இரக்கம் அற்றவன்.

அதே நகரில் அந்தோனியோ என்னும் மற்றொரு வணிகன் இருந்து வந்தான். அவன் மிகவும் நல்லவன்; வட்டி வாங்குவதை அறவே வெறுத்தான். ஏழை, எளியவர்கட்கு உதவி செய்து வந்தான். வெனீஸ் நகரத்திலே அந்தோனியோவுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. அந்தோனியோ வட்டியே வாங்காமல் கடன் கொடுத்தான். இது ஷைலக்கின் வாணிகத்தைப் பாதித்தது. எனவே ஷைலக் அந்தோனியோவைப் பழி வாங்குவதற்கு ஏற்ற சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

வெனீஸ் நகரிலே, உயர்வும் மதிப்பும் மிக்க குடும்பத்தில் தோன்றிய பஸானியோ என்னும் ஒருவன் இருந்தான். அவன் அந்தோனியோவின் மிக நெருங்கிய நண்பன்; ஆடம்பரமாகத் தன் வாழ்வை நடத்தி

வந்தான். அதனுல், அவனிடமிருந்த செல்வம் முழுவதும் மிக விரைவில் அழிந்தது. தனது உயிர் நண்பனுன பஸானியோவுக்கு அந்தோனியோ வேண்டிய மட்டும் பொருள் உதவி செய்து வந்தான். பஸானியோ, வெனீஸ் நகருக்கு அருகிலுள்ள 'பெல்மாண்ட்'டில் வாழ்ந்து வந்த போர்ஷியா என்னும் செல்வச் சீமாட்டியைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினுன். அவள் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுடைய தந்தை இறந்து விட்டபடியால், அவனுடைய செல்வம் அனைத்திற்கும் அவளே தலைவி ஆனுள்.

அவளை மணப்பதற்குப் பஸானியோவுக்கு நிறையச் செல்வம் வேண்டி இருந்தது. அவன், அந்தோனியோவை உதவிபுரியும்படி வேண்டிக் கொண்டான். அந்தச் சமயம் அந்தோனியோவின் கையிலும் பணம் இல்லை. அவனுடைய வணிகக் கப்பல்கள் கடலில் வந்து கொண்டு இருந்தன. அதனுல், அந்தோனியோ ஷைலக்கிடம் கடன் வாங்கி நண்பனுக்கு உதவி புரிய விரும்பினுன். இருவரும் ஷைலக்கிடம் சென்றனர். "ஷைலக், எனக்குப் பெரும் பொருள் தேவையாய் இருக்கிறது. கடனுகக் கொடு. என்னுடைய கப்பல்கள் நடுக்கடலில் வந்துகொண்டு இருக்கின்றன. அவைகள் கரை வந்து சேர்ந்ததும் உன்னுடைய வட்டியையும் முதலையும் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று அந்தோனியோ ஷைலக்கைக் கேட்டுக் கொண்டான்.

இதைக் கேட்ட ஷைலக்கின் பொருமை நெஞ்சம் இன்பத்தால் பொங்கி நிறைந்தது. அவன், தான்

குறிவைத்த மீன் தூண்டிலில் விழுந்து விட்டதாக எண்ணி எண்ணி மகிழ்ந்தான். அம்மம்மா! அந்தக் கொடியவனின் நெஞ்சத்தில்தான் எத்துணை வஞ்சக எண்ணம்! ஷைலக்கின் நெஞ்சம் தீமையின் இருப்பிடம்; பொருமையின் பிறப்பிடம் என்று சொன்னுல், அது மிகையாகாது. "நண்பா, உதவி செய்கிறேன். வட்டி வேண்டாம். குறித்த தவணைக்குள் நீ பணத்தைத் திருப்பிக்கொடுத்து விடவேண்டும். தவறினுல் உன் உடம்பிலிருந்து ஒரு பவுண்டு தசையை நான் எடுத்துக் கொள்வேன். அது குறித்து நீ எனக்கு ஓர் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும்" என்ருன் அவ் வஞ்சகன்.

அவனின் சூதுமதியை அறியாத அந்தோனியோ 'சரி' என்று ஒப்புக்கொண்டான். அவ்வாறு எழுதிக் கொடுத்தல் கூடாது என்று பஸானியோ எவ்வளவோ தடுத்தும் அவன் கேட்கவில்லை. ஷைலக், அந்தோனியோவை ஒரு வக்கீலிடம் அழைத்துச் சென்று தான் கூறியபடி ஓர் ஒப்பந்தம் எழுதி வாங்கிக்கொண்டு பணம் கொடுத்தான்.

ஷைலக்கிடம் வாங்கிய பணத்தை அந்தோனியோ பஸானியோவுக்குக் கொடுத்தான். அவன் அப்பணத்தைப்பெற்றுச் சென்று தன் திருமணத்தைச் சிறப்புறச் செய்து முடித்தான்.

அந்தோனியோ எதிர்பார்த்தபடி கப்பல்கள் வந்து கரைசேரவில்லை. எதிர்பாராத விதமாக அவை வந்து சேரக் கால தாமதம் ஏற்பட்டது. எனவே, அந்தோனியோவால் குறிப்பிட்ட தவணைக்குள் ஷைலக்

கின் கடனைத் திருப்பிக் கொடுக்க இயலவில்லை. தனக்கு வந்து சேர்ந்த பெருந்துன்பத்தை எண்ணி அந்தோனியோ மனம் வருந்தினான்.

பஸானியோ செய்தி அறிந்தான். தனது நண்பனுக்கு வரவிருக்கும் துன்பத்தை எண்ணி வருந்தினான். அவன் வருத்தத்தைக் கண்ட அவன் மனைவி போர்ஷியா துடிதுடித்தாள். "உங்கள் முகமும் உள்ளமும் வாடக் காரணம் யாது? நிகழ்ந்தது என்ன?" என்று அவள் தன் கணவனைக் கேட்டாள். அவன் நடந்த யாவற்றையும் தெளிவுற அவளுக்கு எடுத்துக் கூறினான். அது கேட்ட அவள், "என் செல்வம் முழுவதும் இனித் தங்கள் உடைமையே. வேண்டிய அளவு பணத்தை எடுத்துச் சென்று, உங்கள் நண்பரின் உயிரைக் காப்பாற்றுங்கள்" என்றாள்.

பஸானியோ பணத்துடன் வெனீஸ் நகருக்கு விரைந்தான். அவன் ஷைலக்கிடம் சென்று, "நண்பா, என் நண்பன் உனக்குத் தரவேண்டிய பணத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். பெற்றுக் கொள்" என்றான். ஆனால், அக் கல்நெஞ்சன் பணத்தைப் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டான். "தவணை தவறிவிட்டது. எனக்குப் பணம் பெரிதன்று, ஒப்பந்தந்தான் பெரிது. அதன்படிதான் நடப்பேன்" என்று ஷைலக் கூறி விட்டான். "ஷைலக், எவ்வளவு வட்டி வேண்டுமானாலும் நான் கொடுக்கிறேன்; பெற்றுக்கொள். என் நண்பனின் உயிரைக் காப்பாற்று" என்று எவ்வளவோ வேண்டிக் கொண்டான் பஸானியோ.

ஆனால், ஷைலக் இசையவில்லை. பஸானியோ கவலையுடன் வீடு திரும்பினான். பஸானியோவின் மனைவி ஷைலக்கின் பிடிவாதத்தை உணர்ந்து வருந்தினாள். அவள் எவ்வாறேனும் தன் கணவனின் நண்பனைக் காப்பாற்றவேண்டும் என்று எண்ணினாள்.

அந்தோனியோ வழக்கு வெனீஸ் நகரச் சிற்றரசன் முன் விசாரிக்கப்பட்டது. போர்ஷியா பெரிய வக்கீல் ஒருவரிடம் யோசனை கேட்டாள். பின்னர், வக்கீலுக்கு உரிய உடை அணிந்து நீதிமன்றத்துக்கு வந்தாள். மாற்று உடையில் இருந்த வக்கீல், தாம் அந்தோனியோவுக்காக வாதாடப் போவதாகக் கூறினார்; நீதிபதியின் அனுமதியும் கிடைத்தது. இவ்வழக்கில் பங்குகொண்டு இருந்த எல்லோரும் நீதிமன்றத்துக்கு வந்தனர். வழக்கு ஆரம்பம் ஆயிற்று.

அந்தோனியோவுக்காக வாதாடின வக்கீல் ஷைலக்கை நோக்கி, "உனக்குச் சேரவேண்டிய பணத்தை அந்தோனியோ கொடுத்தாரா?" என்றார்.

"காலம் கடந்து கொடுக்க முன்வந்தார். குறிப்பிட்ட தவணையில் கொடுக்கவில்லை. எனக்கு ஒப்பந்தம் தான் பெரிது. அதன்படி, இப்பொழுது எனக்கு அந்தோனியோவின் ஒரு பவுண்டு தசைவேண்டும்" என்றான் ஷைலக்.

வக்கீல் அந்த ஒப்பந்தத்தை வாங்கி ஒரு முறை படித்துப் பார்த்தார். பிறகு, அந்தோனியோவை நோக்கி, "நீங்கள் உங்கள் மார்பைக் காட்டுங்கள். ஷைலக் ஒரு பவுண்டு தசை எடுத்துக் கொள்ளட்டும்" என்றார் வக்கீல்.

ஷைலக் பேரானந்தம் அடைந்தான்; கூர்மையாகத் தீட்டி வைத்திருந்த கத்தியை எடுத்துக் கொண்டு அந்தோனியோவின் அருகில் வந்தான். அந்தோனியோ தன் வாழ்வு முடிந்து விட்டது என்றே கருதினான். தன் நண்பனுக்கு நேர்ந்த கதியைக் கண்டு பஸானியோ கண்ணீர் விட்டுக் கலங்கினான்; கதறினான்.

வக்கீல் ஷைலக்கை நோக்கி, "டாக்டர் வேண்டும்; வந்திருக்கிறாரா?" என்று கேட்டார்.

"டாக்டர் எதற்கு?" என்றான் ஷைலக்.

"தசையை எடுக்கும்போது இரத்தம் பெருக்கெடுத்து அந்தோனியோ மாண்டு போகாமல் இருக்க வேண்டும். அதற்காகத்தான் டாக்டர் வேண்டும்" என்றார் வக்கீல்.

"அப்படி ஒன்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடவில்லை. எனவே, டாக்டரைக் கொண்டுவர முடியாது" என்றான்.

"சரி, உன் ஒப்பந்தப்படியே நடப்போம். அந்தோனியோவின் உடம்பிலிருந்து ஒரு பவுண்டு தசையை அறுத்து எடுத்துக் கொள். ஒரு பவுண்டு தசைதான் எடுக்கவேண்டும். அதற்கு அதிகமாகவும் எடுக்கக் கூடாது; குறைவாகவும் எடுக்கக் கூடாது. மேலும், ஒப்பந்தத்தில் ஒரு பவுண்டு தசை என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தசையை அறுத்து எடுக்கும்போது ஒரு துளி இரத்தம்கூடச் சிந்தக் கூடாது. சிந்தினால் உனதுபொருள் முழுவதும் பறிமுதல் செய்யப்படும்" என்றார் வக்கீல்.

இரத்தம் சிந்தாமல் எவ்வாறு தசையை எடுக்க முடியும். எனவே, ஷைலக் தனக்குத் தசை வேண்டாம் என்றும், பணத்தைத் திருப்பித் தந்தாலே போதும் என்றும் கூறிவிட்டான்.

இவ்வழக்கினை விசாரித்த அரசர் கொடியவனுன ஷைலக்கின் செல்வம் முழுவதையும் பறிமுதல் செய்து விட்டார்; அப் பொருளில் பாதியை அரசாங்கத்துக்குச் சேர்த்து விட்டார்; மறு பாதியை அந்தோனியோ வுக்குத் தந்தார். "தனக்கு அச் செல்வம் வேண்டாம் என்றும் ஷைலக்கின் மகளுக்கு அதனைத் திருப்பித் தந்து விடுமாறும்" அந்தோனியோ மன்னனை வேண்டிக் கொண்டான்.

ஷைலக் செல்வம் முழுவதையும் இழந்தான். அவன், அந்தோனியோவின் செல்வத்தைக் கண்டு பொருமைப்பட்டான். பொருமை அவன் செல்வத்தை அழித்தது. 'பொருமை என்னும் பாவி ஒருவனுடைய செல்வத்தையும் கெடுத்து, அவனை நரகத்திலும் புகுத்திவிடும்' என்கிருர் வள்ளுவர்.

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்" —குறள்

நீதி மன்றம் கலைந்தது. எல்லோரும் வக்கீலைப் புகழ்ந்து பாராட்டினர். ஷைலக்கைத் தவிர, எல்லோரும் வீட்டிற்கு மகிழ்வுடன் சென்றனர். தனக்காக வாதாடிய வக்கீல் தன் நண்பனின் மனைவியாகிய போர்ஷியா என்பதை அறிந்த அந்தோனியோ மிகவும் மகிழ்ந் தான்; தன் நன்றியை அவளுக்குத் தெரிவித்தான்.

TB
031,3(5)
N63
84915

## 10. நெப்போலியன்

இவ் வுலகில் எத்தனையோ வீரர்கள் தோன்றி மறைந்துள்ளனர். அவர்கள் மறைந்து விட்டபோதிலும், அவர்கள் பெயர்கள் வரலாற்றில் அழியா இடம் பெற்று விளங்குகின்றன. அத்தகையவர்களுள் முதன்மை யாக வைத்துப் பாராட்டத் தக்கவன் நெப்போலியன் ஆவான். இவன் 1769-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாள் ரமோலினி அம்மையாருக்கு மகனாய்ப் பிறந்தான். இவனுடைய தந்தையார் சார்லஸ் போனபார்ட் என்பவர் ஆவார். இவன் பிறந்த இடம் கார்சிகா தீவு ஆகும். இது பிரான்சிலிருந்து நூறு கல் தொலைவிலுள்ளது.

நெப்போலியன் ஐந்து வயது அடைந்ததும் பெற்றோர் அவனைப் பள்ளிக்கு அனுப்பினர். நெப்போ லியன் கண்ணும் கருத்துமாய்ப் பாடத்தைப் படித்து வந்தான்; பள்ளியில் முதல் மாணவனாகத் திகழ்ந்தான். இளமை வயது முதற்கொண்டே அவன் உள்ளத்தில் தான் ஒரு வீரனாகத் திகழ வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. நெப்போலியன் தனது பத்தாம் வயதில் பிரையன் இராணுவக் கல்லூரியில் சேர்ந்து பயின்றான். அங்கும் அவன் முதல் மாணவனாகவே விளங்கினான்.

படிப்பு முடிந்ததும் நெப்போலியனுக்குப் பிரான்சில் உதவிப் படைத்தலைவன் வேலை கிட்டியது. ஆனால்,

அவனுக்குக் கிடைத்த ஊதியம் மிகச் சொற்பமானதே. இங்கிலேயில் அவன் தந்தையார் இறந்து விடவே, குடும்பத்தை நடத்தும் பொறுப்பு அவனே வந்து அடைந்தது. மேலும் அவன் உடல் நலம் சிறிது குன்றியது. எனவே, நெப்போலியன் ஊர் செல்ல விரும்பினுன். வேலேயை விட்டு விலகி கார்சிகா தீவுக்குச் சென்ருன்.

அவ்வமயம் பிரான்சு நாட்டினே ஆண்டுவந்த மன்னன் நாட்டின் நலனே மறந்து மனம்போன போக்கில் ஆட்சி செய்தான். நாட்டில் பசியும் பஞ்சமும் எங்கும் தாண்டவமாடின. செல்வர்கள் ஏழைகளேத் துன்புறுத்தினர். அரசன் வரிமேல் வரி விதித்தான். எனவே, ஏழைகளும் உழவர்களும் தொழிலாளர்களும் ஒன்றுகூடினர்; தங்கள் உரிமையைப் பெறுவதற்காக மன்னனேயும் செல்வரையும் எதிர்த்துப் புரட்சிப்போர் புரியலாயினர். புரட்சிப் படையினர் சிறைச் சாலேகளேத் தகர்த்தனர்; மன்னர் மாளிகையைத் தவிடு பொடி ஆக்கினர். இது கண்ட செல்வர்கள் அஞ்சி ஓடினர். இறுதியாகப் புரட்சிப் படையினர் அரசனேத் தூக்கிலிட்டுக் கொன்றனர்; குடியரசினே அமைத்தனர்.

இச் செயல் கண்டு ஐரோப்பிய வல்லரசுகள் நடுங்கின. இப் புரட்சி ஐரோப்பா முழுவதும் பரவினுல் தமக்கும் தீங்கு ஏற்படும் என்று வல்லரசுகள் அஞ்சின. எனவே, எல்லா அரசுகளும் ஒன்றுபட்டுப் பிரான்சினே அடக்க முயன்றன. ஆங்கில நாட்டுப் பெரும் படை பிரான்சு நாட்டுத் தவுலன் துறைமுகத்தை முற்றுகை யிட்டது. இங்கிலேயில், புரட்சியாளர் நெப்போலியன்

துணையை நாடினர். அவனும் அதற்கு மனம் இசைந்து உதவி புரிய முன் வந்தான். அவன் பிரான்சு நாட்டுப் படையின் தலைவனாய் நின்று ஆங்கிலேயருடன் போரிட்டு, அவர்களைத் தோற்று ஓடும்படிச் செய்தான். இதனால் நெப்போலியன் புகழ் எங்கும் பரவியது.

புரட்சியாளர் அமைத்த புதிய அரசியலை விரும்பாத செல்வர்கள் நாட்டில் கலகம் விளைவித்தனர். அவ்வமயம் அரசாங்கத்திடம் சிறு படையே இருந்தது. எனினும், நெப்போலியன் அப் படையைத் துணையாக வைத்துக்கொண்டு, தன் ஆற்றலால் கலவரத்தை அடக்கினான். பின்னர், நெப்போலியனே பிரான்சு நாட்டுச் சேனைத் தலைவனானான். நெப்போலியன் எகிப்து, ஆஸ்திரியா முதலான நாடுகளுடன் போரிட்டு வெற்றி கண்டான்.

இவ்வாறு தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கிய நெப்போலியன் 1804-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டின் மன்னனானான். நெப்போலியன் இரஷ்யாவையும் வென்று தன்னடிப் படுத்தினான்; ஐரோப்பா முழுவதற்கும் தான் ஒரு பேரரசனாகத் திகழ வேண்டும் என்று எண்ணினான்; ஆங்கில நாட்டின் மீது படையெடுப்பதற்காகத் தன் படையைப் பெருக்கினான்; அதற்கேற்ற காலத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இங்கிலையில், ஆஸ்திரியாவும் இரஷ்யாவும் ஒன்று சேர்ந்து வந்து பிரான்சைத் தாக்கின. நெப்போலியன் எதிர்த்துப் போரிட்டான்; அவர்களை முறியடித்தான்.

இரஷ்ய நாட்டு அரசன் 1812-ஆம் ஆண்டு பிரான்சின் மீது படை எடுத்து வரலானுன். இதனை அறிந்த நெப்போலியன் பெரும் படையுடன் இரஷ்யரைத் தாக்கப் புறப்பட்டான். இரஷ்யப் படை பயந்து பின் வாங்கிற்று. இரஷ்யர்கள் வில்னு நகரில் ஓடி ஒளிந்தனர். நெப்போலியன் விடாது பின் தொடர்ந்தான். அவர்கள், அவ்வூரைத் தீக்கிரையாக்கிவிட்டுத் தங்கள் தலைநகரான மாஸ்கோவை நோக்கி ஓடினர். நெப்போலியனும் விடாது பின் தொடர்ந்து மாஸ்கோ நகர் சென்றுன். அங்கு அவன் படைவீரர்கட்குப் போதிய உணவு கிடைக்கவில்லை. பலர் பட்டினியால் மடிந்தனர். பனியும் குளிரும் அவர்களை வாட்டின. படைபலம் குறைந்ததைக் கண்ட நெப்போலியன், மேலும் படை எடுத்துச் செல்ல விரும்பவில்லை; ஊர் திரும்பினுன்.

நெப்போலியன் படைபலம் குறைந்ததைக் கண்ட சொர்மானியர் நெப்போலியனை எதிர்த்தனர். ஆஸ்திரியரும் இரஷ்யரும் சொர்மானியருக்கு உதவி புரிந்தனர். நெப்போலியன் அஞ்சவில்லை. வல்லரசுகளைத் தாக்கி மூன்று இடங்களில் போரிட்டான். இறுதியாக நெப்போலியன் தோல்வி அடைந்தான்; மனம் உடைந்து பாரிசுக்குத் திரும்பினுன். பின்னர், பகைவர்கள் பாரிசு நகருக்கே வந்து விட்டனர். அவ்வமயம் நெப்போலியனிடம் போதுமான வீரர்கள் இல்லை. இருந்த வீரர்களை வைத்துக்கொண்டு போரிட்டான். இப் போரிலும் நெப்போலியன் தோல்வியே கண்டான்.

பகைவர்கள் அவனை எல்பா தீவுக்கு அனுப்பி அங்கேயே வாழும்படிச் செய்தனர். சின்னுட்களில்,

நெப்போலியன் சில வீரர்களுடன் எவருக்கும் தெரியாமல் எல்பா தீவை விட்டுப் புறப்பட்டுப் பாரிசுக்கு வந்து சேர்ந்தான். பாரிசிலிருந்த பழைய இராணுவ வீரர்களும் மக்களும் நெப்போலியனை ஆரவாரத்துடன் வரவேற்றனர். மக்கள் ஆதரவு பெற்ற நெப்போலியன் மீண்டும் அரசன் ஆனான்.

நெப்போலியன் மீண்டும் அரசன் ஆனதைக் கேள்வியுற்ற ஐரோப்பிய வல்லரசுகள் அஞ்சி நடுங்கின. ஆங்கிலப்படை, இரஷ்யப்படை, ஆஸ்திரியப் படை, பிரஷ்யப்படை ஆகிய நான்கு படைகளும் ஒன்று சேர்ந்து பிரான்சை நோக்கிப் படை எடுத்தன. பெரும்படை கண்டு நெப்போலியன் அஞ்சினான் இல்லை. ஆண்மையுடன் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டான். 'வாட்டர்லூ' என்னும் இடத்தில் இரு சாரார்க்கும் பெரும்போர் நடந்தது. அந்தோ! நெப்போலியன் இப் போரிலும் தோல்வியே கண்டான்.

நெப்போலியன் மாபெரும் வீரன்; அஞ்சா நெஞ்சம் கொண்டவன்; போர் என்று சொன்னால் பூரிக்கும் பெருந்தோள் கொண்டவன்; விழுப்புண் படாத நாள் எல்லாம் வீணே கழிந்த நாட்கள் என்று எண்ணியவன். அவன் வாளால் மடிந்த வீரர் தொகை ஏராளம். அவன் பெயர் கேட்டு அஞ்சியோடிய வீரர் தொகை அதனினும் அதிகம். ஆயினும், இறுதியில் அவனுக்குக் கிடைத்தது தோல்வியே. நான்கு பெரும் வல்லரசுகள் ஒன்று சேர்ந்து எதிர்க்கும் போழ்து அவன் ஒருவன் என் செய்தல் கூடும்? அவன் படைவீரர்களின் எண்ணிக்கையோ மிகவும் குறைவு.

113
031.3(5)
N63



இந்தச் சமயத்தில் வள்ளுவப் பெருமான் 'மறை மொழியை நாம் நினைவு கூர்தல் வேண்டும். மயில் இறகுகள் மென்மையானவையே. அவைகளேயும் அளவுக்குமீறி வண்டியில் ஏற்றிஞல், வண்டியின் இருசு பாரம் தாங்கல் ஆற்ருது ஒடிந்து விடும். அதே போல் ஒருவன் எவ்வளவு வலிமையுடையவன் ஆயினும் பலருடன் பகைத்துப் பகைகொள்வானேயாகில், அவன் அழிதல் நிச்சயம்.

" பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் " —குறள்.

ஆங்கில அரசாங்கம், தோல்வி அடைந்த நெப்போலியனைச் செயின்ட் ஹெலீனுத் தீவுக்கு அனுப்ப முடிவு செய்தது. நெப்போலியன் தன் தாய் நாடாம் பிரான்சை விட்டுப் பிரியும்போது கதறினன்; கண்ணீர் விட்டுக் கதறி அழுதான். "வீரர்களேப் பெற்றெடுத்த பெருநாடே! என்னை வளர்த்த பொன்னுடே! உன்னை விட்டுப் பிரிகிறேன். இனி நான் உன்னை என்று காண்பேன்?" என்று கூறிக்கொண்டே நெப்போலியன் பிரான்சை விட்டுப் பிரிந்தான்.

84915

மனம் உடைந்த நெப்போலியனைக் கப்பல் ஹெலீனுத் தீவில் கொண்டு போய் இறக்கியது. நெப்போலியன் இறுதிவரை அங்கேயே வாழ்ந்தான். நெப்போலியன் அங்கிருந்து தப்பிவிடாதபடி, ஆயுதம் தாங்கிய வீரர்கள் பாதுகாவல் புரிந்தனர். 1821–ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் நாள் நெப்போலியன் பூதவுடலை நீத்துப் புகழுடல் பெற்ருன்.

---

RTR/688